1292

# ஜகன்மோகினி

# JAGANMOHINI

1—6—58

25 நயா பைசா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 DEC 1958
MAD

1292
4-58

JL
N58·35-6.
183220






# ஜகன்மோகினி




ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்தி.
—வீரராகவ கவி


ஜூன் 1958. மலர் 35, இதழ் 6. விளம்பி ஸூ வைகாசி மீ


## விஷய அட்டவணை


| | பக்கம் |
|---|---|
| உள்ளும் புறமும் —வி. கே. பார்த்தசாரதி | 1 |
| சொல்லட்டுமா! —ஹாஸ்யநடிகர் நாராயணராவ் | 6 |
| அடியார் வாக்கு —டி. எஸ். ராஜகோபாலன் | 9 |
| சாந்த —நீலா ராமமூர்த்தி | 13 |
| பாரதப் பூங்கா —வசுமதி ராமசுவாமி | 18 |
| பொன்னி —அருளாளன் | 20 |
| கங்கணம் கட்டியவன் —கே. வி. விஜயலக்ஷ்மி | 26 |
| கிழக்கு வெளுத்தது —வை. மு. கோ. | [97-112] |




## கங்கா பொன் விழா காட்சிசாலை. பிக்கானீர்

கங்கா பொன்விழா காட்சிசாலையானது மகாராஜா கங்கா சிங்ஜியின் பொன்விழா ஞாபகார்த்தமாக 1937-ல்பிக்கானீரில் ஸ்தாபிக்கப்பட்டது. இது வட்ட வடிவமான நவீன பாணியில் கட்டப்பட்ட மாடிக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த மண் பிரதிமைகள் (டெரா:கோட்டா) இங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரதிமைகள் பூர்வ குப்தர்களின் காலத்தைச்சேர்ந்தவையாகும். இவைகள் பிக்கானீர் டிவிஷனிலுள்ள சூரத்காருக்கும் உறனுமான்காருக்கும் இடையேயுள்ள பிரதேசங்களிலிருந்து டாக்டர் எல். பி. டெஸிட்டரியால் 1917-ல் கண்டெடுக்கப்பட்டன.

இப்பிரதேசங்கள் அனேகமாய் மொகன் ஜதாரோ நாகரீக காலத்தைச் சேர்ந்தவைகளாகும். சில பிரதேசங்கள் இந்தியாவிலேயே மிகப் பழமையான பிரதேசங்களாகக்கருதப்படுகின்றன. இப்பிரதேசங்களில்தான் புண்ணிய நதியான சரஸ்வதி ஓடியதாகக் கர்ண பரம்பரைக் கதை வரலாறு கூறுகிறது.

### ஜெயின் பிம்பங்கள்

மண் பிரதிமைகளைத் தவிர இக்காட்சிசாலையில் சரஸ்வதி தேவியின் அழகான சலவைக் கல்சிலையொன்றும் இருக்கிறது. அது கி. பி. 11-12-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். நான்கு அடி எட்டு அங்குலம் உயரமுடைய அச்சிலை பிக்கானீர் டிவிஷனி


(கடைசி அட்டையில் காண்க)

## ★ உள்ளூர் புறமும் ★

**ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார்.**

---

### அணுகுண்டு பரீக்ஷை

இன்று, எங்கும் உலக சமாதானப் பேச்சாகவே இருந்து வருகிறது. வல்லரசுகளிடை உயர் மட்டப்பேச்சு நடந்தேறப்போகிறதென வருடக்கணக்காக எதிர்பார்க்கப்பட்டும், அப்பேச்சு நடந்தேறும் வழி, துறை, நிபந்தனைகள் தாம் இன்றும் இன்னமும் நிச்சயிக்கப்பட்டதாயில்லை. அணுப்பரீட்சை நிபந்தனையைப் பற்றி வல்லரசுகளிடை ஒருமனப்பட்ட தீர்மானம் காண முடியாததுவே இவ்வுயர்மட்டச் சமாதான மகாநாடு கூட முடியாதிருக்கும் ரகசியமாம். இதற்கு முற்கூருத வல்லரசு நிபுணர்கள் ஜினிவாவில் கூடிப்பேசவேண்டுமென ஐஸன்ஹோவர், 24-5-58ல் குருஷேவுக்கு எழுதியுள்ளார். நாஸர், குருஷேவ் மூலம் ருஷ்ய மக்களை வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்து மெச்சியுள்ளார். லெபனானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி விஷயமாக, மேற்கத்திய வல்லரசுகள் எவையும் ஸோவியத்தை எதிர்த்து கட்சி கூட்டிப் பிரவேசிக்கலாகாதென்றும், அப்படிப் பிரவேசிப்பாராகில், அதுவே மத்திய ஆசிய அமைதி குலைவிற்கு அடிப்படையாகும் என்றும் ருஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது, மூன்ருவது ஸ்புட்னிக்கும் பறக்கவிடப்பட்டாகி விட்டது.

### பிரஞ்சு அரசாங்கத்தின் நிலையற்ற நிலை

பிரஞ்சு தேசத்திலும் இன்றைய உள்நாட்டு நிலைமை வெகு குழப்பமுற்றதாகவும், உலக அமைதி குலைக்கக் கூடியதாகவுமே காண்கிறது. சமீபத்தில் நாட்கள் கணக்கிலேயே புதிதாக அதிகாரமேற்றிருக்கும் பிலிம்லின் மந்திரி சபைக்கு எதிர்ப்பு அதிகரித்து விட்டது. ஆல்ஜீரியாவிற்குக் குடியரசு பதவி கொடுத்தால் தான் பிரஞ்சுதேசம் உலகநாடுகளில் மதிப்புற விளங்கக்கூடியதென்பது பிலிம்லின் வாதம். ஆனல் வலதுசாரியார் இவரை எதிர்த்து, பிலிம்லின் ஆட்சியை அகற்றி, ஜெனரல் டிகால் என்பாரைப் பதவியேற்றி ராணுவ ஆட்சி உண்டாக்கிக் குடியரசு கவிழ்த்திட முன்வந்துளர். ஆல்ஜீரியாவிலோ, ராணுவத் தலைவர்கள் அதிகார பதவிகளை ஆக்ரமித்துக்கொண்டு, சட்ட ரூப ஆட்சியை எதிர்த்துப் பெருத்த உள்நாட்டுக் கலகம் கிளப்பிவிட்டனர். சமீபத்தில் கார்ஸிகாவில் ராணுவ அரசாங்கம் வலுத்து சட்டபூர்வமான அரசாங்கம் அழிக்கப்பட்டதாகி நிற்கிறது. உள்நாட்டுக் கலகம், பிரஞ்சு ராஜ்யமெங்கும் திண்ணமென எண்ணக் கூடிய நிலைமை தந்துள்ளது.

### புதுச்சேரியின் பதவி மோகம்!

இதன் எதிரொலியாக நமது இந்தியாவில், புதுச்சேரியில் அமைதிநிலை கலகலப்புற்றுளது. புதுச்சேரி, இன்னமும் சட்டபூர்வமாக, பிரன்சுக்காரரிடமிருந்தும் மாற்றப்பட்டதாகவில்லை

யாதலால், தனித்ததோர் மாகாணமாகவே இருந்து வருகிறது. இரண்டே லக்ஷம் ஜனத்தொகை கொண்ட இச்சிறிய ஊருக்குஒரு மாகாணப் பதவி கொடுத்தால்,அல்பனுக்கு ஐச்வர்யம் கொடுத்த கதைதான். புதுச்சேரி மாகாணப் பிரதம கமிஷனர், அஸெம்பிளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அறுவர் கூடிய 'கவுன்சிலின்' யோசனைகளைக் கேட்டு அரசாங்கம் நடத்தி வருகிறார். சமீபத்தில் அந்தக் கவுன்சிலருள் ஒற்றுமையில்லாததால், கமிஷனர் அந்தக் கவுன்சிலை 23-5-58 முதல் கலைத்துவிட்டு ராஜ்யபாரப் பொறுப்பு முழுவதையும் தானே ஏற்றுள்ளார். 1958 ஆகஸ்டில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய புது அஸெம்பிளி கொடுக்கும் புது கவுன்சிலர்கள் வரும்வரை கமிஷனர் ஆட்சிதான். காங்கிரஸ் கட்சியார் பெருவாரியாயிருந்து ஒற்றுமைப்பட உழைக்க முடியவில்லையென்பதே இது அறிவிக்கும் பாடம்.

இதுவரை 'பிரஞ்சு வெறியை' எதிர்த்துப் போராடிய புதுச்சேரி மக்கள், இன்றும் அதே பதவி வெறியை விடாது வளர்த்து ஊரை இரண்டுபடச் செய்து வருகிறார்கள். பாரிஸ் ஆமோதிப்பும் உள் உதவியும் இதற்கு இருக்கிறது என்ற சந்தேகப் பேயை வல்லரசாளர் மெல்ல உலவவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். எல்லாம் தனித்த தலைவர்களது பரஸ்பர விரோதமும், பதவிப் போட்டி காரணமான போராட்ட வெறியுமேதான். உலகெங்கும், உலக சமாதானப் பேச்சு, காரியத்தில் கைகூடமுடியாத பகட்டுப் பிரசாரமாயிருந்து வர, நமது இந்தியாவின் நிலைமையையும் கண்ணோட்டமாகச் சிறிது கணிசிப்போம்.

### நேருஜீயின் ஓய்வு நாட்டுக்கு நலனா?

நமது இந்தியப் பிரதமர் நேருஜீ, தனது சரீர ஆரோக்கியத்தைக் குறித்துச் சிறிது நீண்டகாலம் ஓய்வெடுத்து, அரசியல் தொல்லைகளை மறந்து, அதனின்றும் வெளிப்பட்டிருக்க விரும்பினார். ஆனால், அவர் இவ்வேண்டுகோளை வெளியிட்டவுடனேயே, பலதரத்துத் தலைவர்களும், காங்கிரஸ்கட்சியினரனைவருமாக ஏககோஷமாய், 'ஐயா! தாங்கள் அரசியலுலகிலில்லாது அப்புறப்பட்டிருந்தால், ராஜ்ய சக்கிரமே ஓட்டம் நின்று ஒடிந்து விடுமே! ஆகவே தங்களை விடமாட்டோம்'—என்று கதறிக் கண்ணீர் உதிர்த்தனர். அவரும், பாவம், இவ்வேண்டுகோளை நம்பி, நெடுநாள் ஓய்வு விடுத்து, சிலநாட்களே விராமம் வாங்கிக்கொண்டார். நேரு இல்லாவிட்டால் இந்திய அரசாங்கமோ, காங்கிரஸ் ஸ்தாபனமோ இனி செயலற்று, நிலையற்று, மறைந்து விடுமென்று யாவருமாக எழுப்பிய கூச்சல் உண்மைதானா? அதை நம்பித்தான் நேருவும் தனது தீர்மானத்தை மாற்றிக்கொண்டாரா? எக்காரணத்தாலாவது நேரு திடீரென ஒதுங்கி விட்டால், இந்தியாவில் தலைமைப் போட்டியும், காங்கிரசில் பதவிப் போட்டியுந்தான் மலிந்து உள்நாட்டுக் கலகத்திற்கு இரையாக்கப்போகிறதா நமது சுதந்தர இந்தியாவை? இதுதானா நம் அரசாங்கத்தின் நோக்கும், காங்கிரசின்போக்கும்? இந்நிலை தவிர்க்கப்படவேண்டாமா? இதையெல்லாம் யோசிக்கக் காணோமே—.

183220

## ஒரிஸ்ஸாவில் கட்சி வேற்றுமை

ஒரிஸ்ஸா காங்கிரசு மந்திரிசபைக் கலவரத்தை ஊன்றிக் கணிசியுங்கள்—. அஸெம்பிளியில் காங்கிரஸ் பெருவாரி யிருக்கிறதா, இல்லையா என்ற சந்தேகத்தைத் தீர்த்து, காங்கிரஸ் மந்திரி சபையிடம் பொதுமக்கள் ஆதரவு உண்டா இல்லையா என்றெழும்பிய சர்ச்சையை முடிவு கட்ட, மகதாப் மந்திரிசபை விஷப் பரீட்சை பார்ப்பதுபோல காங்கிரஸ் பார்லிமெண்டரி கமிட்டியார் சிபார்சுப்படி 9-5-58ல் ராஜிஞமா செய்தனர். அதன் காரணமாய் ராஜாங்கப் பொறுப்பேற்ற கவர்னர், டெல்லி சென்று ஜனாதிபதி, நேரு, மற்றும் தனது இதர நண்பர்கள் யாவரையும் கண்டுபேசித் திரும்பிய பின்னர், மகதாப்பையே திரும்பவும் அவரது மந்திரி சபையுடன் ராஜாங்கப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டினர். இதன் காரணம் அஸெம்பிளியில், வேறெந்த தனிப்பட்ட கட்சிக்கும் பெருவாரிப் பலம் இல்லையென்பதும், காங்கிரஸே பெருவாரி மதிப்புப் பெற்றதென்பதும், காங்கிரஸ் கட்சியினர் செயல் காரணமாய் ஒரிஸ்ஸாவில் ஜனாதிபதியாட்சி நிலை வரக்கூடாதென்பதுந் தானும். இதனால் ஐந்தாண்டு திட்டம் பாதிக்கப்படுமாதலால் மகதாப்பே மறுபடியும் ஆட்சிப் பொறுப்பேற்றிடவேண்டுமென தேபாரும் புத்திமதி கூறினாராம். ஆகவே இப்பொழுது மகதாப் தனது ராஜிஞமாவை வாபஸ் வாங்கிக்கொண்டு 24-5-58 முதல் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுள்ளார். எதிர்க் கட்சியினால் எதிர்ப்பும், தூஷணப் பிரசாரமும் வலுத்து வருகிறது. இதனால் யாருக்குப் பெருமை?

## ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டை தாழ்ப்பாள்

தேவிகுளம் பீர்மேடில் இப்பொழுதுதான் தேர்தல்கள் முடிந்தன. கம்யூனிஸ்டாரே வெற்றி பெற்றனர். இதில் மற்றொரு விசேஷம் யாதெனில், கம்யூனிஸ்ட் மந்திரிப்பதவி கொண்ட தலைவரெவரும் கம்யூனிஸ்டு அபேக்ஷகர்களுக்காகத் தேர்தல்களில் பிரசாரமேதும் செய்திட முன்வரவே யில்லை. காங்கிரஸ் மந்திரி பதவியாளரும் தலைவர்களும் நேருஜீ விஜயம் முதல் முன்வைத்துக் காங்கிரஸ் அபேக்ஷகருக்காகத் தீவிரப் பிரசாரம் நடத்தினார்கள். இருந்தும், முடிவு, பிரசாரமற்ற கம்யூனிஸ்டார் வெற்றியே. இதனால், காங்கிரஸ் பிரசாரம், இந்தியாவில் இனி, ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு இரட்டைத் தாப்பாள் என்ற கதியைப் பெற்றிடுமோயெனப் பயப்படவேண்டியே யுளதன்றோ!

## பல மாகாணங்களின் பரிதவிப்பு

மைசூர் மந்திரிசபை மாற்றமும், அங்கு நடந்தேறி வரும் மைசூர்—பம்பாய் எல்லைப்புற சச்சரவும், பஞ்சாபில் நடந்தேறி வரும் காங்கிரஸ் கட்சி நிலைமையும் கவலைக்கிடமே கொடுத்து வருவதாயுள.

பத்து வருட காலமாய் இன்றும் இனியும் எளிதில் தீர்க்கப் படாதிருந்து வரும் காஷ்மீரப் பிரச்சினையும், அது காரணம்

பற்றி இந்திய—பாகிஸ்தான பரஸ்பர உறவு நிலைமையும், காங்கிரஸ் ஆட்சிக்குக் கவலை கொடுப்பதாகவே உள்ளன. ஷேக் அப்துல்லா திரும்பக் கைது செய்யப்பட்டது, பாகிஸ்தானியர் சுயாட்சித் தீர்மான பாத்யதையை இந்தியா பகிரங்கமாய் எதிர்ப்பதாகுமென்று பாகிஸ்தானியர் பிரசுரித்து, தனது சுய விடுதலையையும் தியாகஞ் செய்து, பொதுமக்கள் உரிமைகளை விற்றி— ஒவ்வாத ஒப்பற்ற வீரரென அப்துல்லாவைப் போற்றச் செய்துளது. காங்கிரஸ் முக்கிய தலைவரும், காந்தீய அஹிம்ஸா போராட்ட வீரரும், பிரிவினைப் பின்னர் எல்லைப்புறத்தாரது சுதந்திரத்திற்காகப் போராடியவருமான டாக்டர் கான் ஸாஹேப், பாகிஸ்தான் அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டு, விடுதலை மறுக்கப்பட்டு, ஓர் வெறியனால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானிய சைனியங்கள் அஸ்ஸாம் எல்லைப்புறங்க து குண்டு வீச்சுக்கள் எழுப்பி, ஒரு மாதத்திற்கு மேலாக, கீழ்வருகாள எல்லைப்புறங்களில் நாசமுண்டாக்கியும், நாகர்களைக் கலகமூட்டிக் கிளப்பியும் இடையருத் தொல்லைகள் கொடுத்வங்ளில் கின்றனர். பஞ்சாப் பிரச்னையும் அதைச் சுற்றிய மாகாணத் தொல்லைகளும் வேறு. பர்மா ராஜ்யத்தில், பிரதான இருபெரும் கட்சிகளிடை வேற்றுமைகள் காரணமாக, இதர சில்லரைக் கட்சிகளெல்லாம் மித்ரபேத நடவடிக்கைகள் கையாண்டு, பதவியிலிருக்கும் அரசாங்கத்தார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துள—. ஜம்ஷேட்பூரில் சமீபத்தில் பெருத்ததோர் வேலை நிறுத்தக் கலகம் எழும்பி, பெருந் தீ விபத்துண்டாக்கி, கடைகளையெல்லாம் எரித்து, காங்கிரஸ்—கம்யூனிஸ்ட் கலகமாகத் தலைவிரித்தாடி நின்றது. இலங்கைத் தீவில் தமிழருக்குத் தொல்லைகள் வளர்ந்து, குடியுரிமை காரணமாகவும், பாஷைப் பிரச்சினை காரணமாகவும் அதிகரித்தே போகின்றனவேயொழிய, தீருவதாகக் காணோம்.

## ஐந்தாண்டு திட்டத்தின்!..........

சுற்றுப்புறமெங்கும் உள்ளும்புறமும் இப்படிக் கொந்தளித்து நிற்க, ஐந்தாண்டு திட்டம் நிறைவேற்ற காங்கிரசு அரசாங்கம் மும்முரமாக திட்டமிட்டுப் போகிறது. சுதந்திரக் கடலில் கரை காணக் கொண்டு செல்லும் கப்பல் ஒட்டையாகியதை அறிந்தும், வேறு நல்ல கப்பலைக் கொள்வதை விட்டு, பிறரறியாவண்ணம் ஒட்டைகளை அடைத்து மூடிக் கரையேறிவிடலாமென்ற காங்கிரஸ் முயற்சிதான் விளங்கவில்லை. இதனால் யாருக்கு நலம்?—. முந்தரா விசாரணை நிற்க, தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தைப் பற்றிச் சமீபத்தில் வெளிவந்துள்ள செய்திகள் கவலை தருகின்றன. 3.86 லக்ஷம் ரூபாய்கள், மைதான் அணைக்கட்டில், ஆரம்பச் சிலவாக வீணாக்கப்பட்டதாகவும், சுமார் 66 லக்ஷ ரூபாய் பிளான்கள் வரைவதில் சிலவழிக்கப்பட்டது வீணே யென்பதாகவும், ஆடிட் ரிபோர்ட்டில் குறிக்கப்பட்டுள்ளது. நெய்வேலி திட்டம் வேலைக்கு தாம்பரம் முதல் விழுப்புரம் வரையில் போடவேண்டுமென திட்டமிடப்பட்ட மின்சார ரெயில்வே திட்டம் கைவிடப்

பட்டு, செங்கல்பட்டு வரைக்குமாவது போடப்பட்டால் போதுமெனச் சொல்லப்படுகிறது. இதைவிட சென்னை சென்டிரலிலிருந்து அரக்கோணம்வரைக்குமான மின்சார ரயில்பாதைபோடுவதை எடுத்துத் திருவள்ளூர்வரைக்குமாவது முதல்நிலை பூர்த்தி செய்தால் நகர ஜன நெருக்கடியும், அப்புறத்துள்ள சென்னை உத்யோகஸ்தர்கள் கஷ்டங்களும் தீருவதாகும்.

### விபத்துக்களை தவிர்க்க விமோசனம் இல்லையா?

இவ்வளவு இக்கட்டுக்களுக்கிடையே உணவு பொருள் விஷந் தீண்டப்பட்ட தொல்லை வேறு. தினப்படிக்கு சர்வ சாதாரணமாக நடந்துவரும் ரயில் விபத்துக்களும், விமான விபத்துக்களும் லாரி, மோட்டார் விபத்துக்களும்.— விசாரணைக் கமிட்டி ஏற்படுத்துவதால் மட்டும் இறந்தவர் பிழைத்து விடுவார்களா? இவ் விபத்துகள் அறிவிக்கும் பாடம் ஒன்றே—. கைத்தொழிலபிவிருத்தி சடுதியிலேற்பட வேண்டுமென்ற கவலை காரணமாய், தொழிற் தேர்ச்சி கவனிக்கப்படாது பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டாகிறதென்பதுதான்!—. 23-5-58ல் கல்கத்தா ரயில் விபத்து, மதுரையில் அதே தினத்தில் உண்டான பஸ்—லாரி மோதல் விபத்து, 21-5-58ல் ராஜ்கோட் ரயில் விபத்து காரணமாக ஏறிவரும் சாவுப்பட்டியல் இவைகளே இதற்குச் சான்றும்.

சுற்றியெங்கும் தீயும், விபத்துக்களும், உள்நாட்டுக் கலகங்களும், எல்லைப்புறத் தொல்லைகளும், வெளிப்புற உறுமல்களும் அடங்காது அளவு மீறிப் பொங்கிப் போகிறதே!—. இந்நிலையை இனியாவது உண்மை தேசிய மக்களும் தலைவர்களும் சிந்தித்துச் செயலாற்ற முன்வரவேண்டாமா?

★

**தயாராகி விட்டது**

வை. மு. ஸ்ரீயின்

# தீபஸ்தம்பம்

வை. மு. விஜயலக்ஷ்மி

விலை ரூ. 4.

# சொல்லட்டுமா!

ஹாஸ்ய நடிகர் L. நாராயணராவ்

'ஏதோ உன் கருணையால் இந்த கண்டத்தில் பிழைத்தேனடா ஆண்டவா!' என்று கடவுளுக்கு ஒரு கும்பிடு செலுத்தி விட்டு அவன் கோயிலிலேயே அமர்ந்து விட்டேன். கனவில் கண்டு களித்த ரயில் ப்ரயாணத்திற்கும் நேரில் அனுபவித்த விதத்திற்கும் ஈடு இணை உண்டா?

ப்ளேக் கும்பலோடு எங்களையும் தள்ளிவிடப் போகிறானே என்ற நடுக்கம் உள்ளூர உதைத்துக் கொண்டிருந்ததால், அந்த கிலியிலேயே ஜுரம் வந்து விடும் போல் இருந்தது. அகத்தின் அழகை முகம் தெரிவிப்பதற்கு முன்பு உலர்ந்த உதடுகள் காட்டிக் கொடுத்து விடுமே! அதனால் நாக்கால் உதட்டைத் தடவி தடவி ஈரமாக்கிக் கொண்டே வந்த பழக்கம், ரயிலை விட்டு இறங்கிய பிறகும் விடாது என்னைத் தொடர்ந்தது.

ஜோரான ப்ரயாணத்திற்கு வீட்டிலே கிடைத்த சன்மானம் ஒரு புறம் வதைக்க, மனது மறுபுறம் ஓட, கையோ தலையை தடவி மூளையை ஊக்கி ஒரு முக்கியமான ப்ரச்னையைத் தீர்க்கத் துருவிக் கொண்டிருந்தது.

அப்போதுதான் கோயில் பின்புற தோட்டத்தில் ஆனந்தமாக விளையாட என்னருமை நண்பர்கள் குதி போட்டுக் கொண்டு வந்தனர். ஆட்ட சுவாரஸ்யத்தில் முதலில் நான் உட்கார்ந்திருப்பது அவர்கள் கண்களில் தட்டு படவில்லை. சிறிது நேரங்கழித்துத்தான், "அடடே! தேவு இங்கே இருக்கிறானடா" என்று கூச்சலிட்டவாறு ஓடி வந்தனர்.

"ஹூம்..." என்று பெரியதாக பெருமூச்சு விட்டேன். "ஏண்டா தேவு! என்னமோ போல் இருக்கிறாயே? என்ன விஷயம்" என்றான் ஒரு பையன்.

"ஒன்றுமில்லையடா! நான் இருப்பது உங்களுக்கெல்லாம் எங்கே தெரியப் போகிறது. நீங்கள் எல்லோரும் சந்தோஷமாக இருப்பவர்கள்" எனக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"என்ன தேவு... சலித்துப் போன பெரிய தாத்தா போல் பேசுகிறாயே. உனக்குச் சந்தோஷத்தில் என்ன குறைவு? சொல்லு"

ஒரு ஆசையாவது நான் நினைத்தபடி நிறைவேறுகிறதா? ஹூ...ஹூ. ஊரில் இருந்தாலும் நிம்மதி யில்லை. வெளியே சென்றாலும் தெம்பு இல்லை"

"தேவு!....இது என்ன அழுமூஞ்சி மாதிரி ஈனஸ்வரத்தில் பேசிக்கொண்டே போகிறாய். உன் ஆசை என்னவென்று சொன்னால் தானே எங்களுக்குத் தெரி

யும்"—என்றொரு பையன் அவன் ஆசையை தீர்த்து விடுவது போல் பேசி ஆவலைக் கிண்டினான்.

"சொல்லட்டுமா என் ஆசையை! உங்களால் தீர்க்கமுடியுமா?"

"ஓ!"என்று அந்தவானரக் கூட்டம் கோஷித்தது.

தொண்டையைக் கனைத்துக்கொண்டு அல்ப சந்தோஷத்துடன் "வந்து... கரூரில் பாலாமணி வந்து நாடகம் நடத்துகிறாளாம். ப்ரமாதமாய் நடக்கிறதாம். அதற்குப் போக வேண்டும் என்று நான் பார்க்கிறேன். வீட்டிலோ இந்திப் பேச்சை எடுத்தாலே கலாட்டா. சொல்லாமல் கம்பி நீட்டலாம் என்றால் கையில் பைசா கிடையாது."

"ஐயோ! நாம்மட்டும்தான் இப்படி உட்கார்ந்திருக்கிறோம் என்று நீ நினைக்கிறாயா? என் வீட்டிலும் நான் கெஞ்சி கேட்டு விட்டேன். ஒன்றும் பலிக்கவில்லை"—என்று தன் குறையை ஒரு பையன் மெள்ள அவிழ்த்தான்.

"என் வீட்டில் மட்டும் என்ன? கரூரில் இப்போது திருவிழா நடக்கிறதே அதற்குப் போகவேண்டும் என்று அடம் பிடித்தேன். கிளம்ப முடியவில்லை."

"என் மாமா வீடு கூட அங்கிருக்கிறது. அவர் வீட்டிற்குப் போகிறேன் என்ற சாக்காக வைத்துக் கேட்டு விட்டேன். 'ஹூம்....ஹூம்' என்று ஒவ்வொருவராக பின் பாட்டுப் பாடத் தொடங்கினர்.

எல்லோர் முகமும் தொங்கி நின்றது. அந்த சமயம் ஒரு சுட்டிப் பையன், "தேவு இங்கே வாயேன்" என்று என்னைத் தனியாக சற்று தூரம் அழைத்துச் சென்றான். பிறகு, தேவு! திருவிழா என்றால் யார் வீட்டிலும் திட்டமாட்டார்கள். அப்படி கூறி கிளம்பிவிடேன். நானும் நீயும் போகலாம்" என்று ரகசியக் குரலில் காதைக் கடித்தான்.

"வேண்டாமடா. வீட்டில் சொல்லாமலேயே இருவரும் நழுவி விடுவோம். யாருக்கும் சொல்ல வேண்டாம்" என்று தீர்மானத்தை ஒருவாறு முடித்தனர்.

முன்கூட்டிய யோசனைப்படி கையில் பைசா இல்லாததால், ஆசை விரட்டியதால் காலையே வாகனமாக்கிக் கொண்டு ப்ரயாணத்தைத் தொடங்கினோம். முன்காலத்தில் ப்ரயாணிகள் தங்குவதற்காக ஏழு, எட்டு மைலுக்கு ஒரு சத்திரம் கட்டி வைத்திருப்பார்கள். அதில் தருமத்திற்கு சாப்பாடு போட்டுப் படுக்க இடம் கொடுப்பார்கள்.

அப்படி போகும் வழியிலிருந்த ஒரு சத்திரத்தில் நாங்கள் ஏறினோம். நிறைய பேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு மூலையிலிருந்து, "யாரடா நீங்கள்?

பையன்களா!" என்றொரு குரல் எழும்பியது. அந்த குரலுடைய உருவம் அருகில் வந்து எங்களை நோக்கியது தான்தாமதம் "டேய்; நீ தாஸர் பிள்ளையல்லவா? எங்கே இப்படி கிளம்பினுய்? வீட்டில் சொன்னுயா? இல்லையா? அவன்யாரு?" என்று கேள்விகள் அடுக்கத் தொடங்கினர். என் வயிற்றிலும் புளியைக் கரைக்கத் தொடங்கியது. "ஹி..ஹி..இல்லை... ஆமாம்.. தாஸர் பிள்ளை தான்...ஆமாம்.... இரண்டு பேரும்தான்... திருவிழாவுக்குப் போகிறோம்" என்று அசட்டுச் சிரிப்போடு ஏதோ உளறி கொட்டினேன்.

"அவனும் தாஸர் பிள்ளையா? சரி உங்களால் திருவிழாவிற்கு நடந்து போகமுடியும் என்ற எண்ணமா? சாப்பாடு போடுகிறேன். பேசாமல் சாப்பிட்டு விட்டு வீடுபோய்சேருங்கள்" என்ருர்.

அதுமட்டும் சாப்பாடு போடுகிறேன் என்றவார்த்தையாவது கூறினரே என்று மறு பேச்சின்றி அகோர பசியைத் தணித்துக் கொண்டோம். உள்ளுர ஒரே உதைப்பு. எங்கு போனுலும் இந்த அப்பாவைத் தெரியாதவர்கள் இல்லையே. இனி இங்கு நிற்கக் கூடாது என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது மறுபடியும் "ஹூம்! பசங்களா வீடு போய் சேருங்கள்" என்று மறு முறையும் உத்திரவு பிறந்தது. "அப்படியேமாமா சற்று திண்ணையில் உட்கார்ந்திருந்து விட்டு போகிறோம்" என்று அடக்கமாகக் கூறினேம். அவர் அப்படி உள்ளே சென்றதும் மறுபுறத்தை நோக்கி நடந்தோம்.

கட்டுக்கடங்காத ஆவலில் கால் வலியோ, சலிப்போ தட்டவில்லை. நன்ருக கும்பிருட்டு சூழ்ந்து கொண்டு விட்டது. காலும் தளர்நடை போட, கண்ணை உறக்கம் இழுத்தது. அப்போது எங்களைக் காக்க ஒரு சத்திரம் இடைமறித்து நின்றது. வெகு நேரம் ஆகிவிட்டிருந்ததால் ப்ரயாணிகள் எல்லோரும் உண்டு உறங்கவும் தொடங்கி விட்டிருந்தனர். பின் புறம் சென்று சாப்பாடு கிடைக்குமா என்று கேட்டதில் சாப்பாட்டிற்குப் பதில் கூப்பாடு போடத் தொடங்கி விட்டான் அவன்.

"ஏன் தம்பி! யாரு நீங்க. இத்தனை நேரம் கழித்து வந்தால் சாப்பாடும் கிடையாது, ஒன்றும் கிடையாது. பேசாமல் போய் படு" என்ருன். பலபேர் மத்தியில் போய் படுத்தால், திருடன் சோம்பேரி என்று ஏதாவது நினைத்துவிடப் போகிருர்களே என்று ஒரு மூலையில் இருவரும் அடைக்கலமானேம். குளிர் உடலை ஒடுக்க பயம் நெஞ்சைஅழுத்த முடங்கினேம். (தொடரும்)

# அடியார் வாக்கு

ஸ்ரீ டி. எஸ். ராஜகோபாலன், பி.ஏ ,எல்.டி.

★

வைஷ்ணவ மதாசாரியர்களுள் சிறந்தவர் இராமாநுஜாசாரியார். இவர்க்குத் திருநாமங்கள் பல. இவர், ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளியிருந்து ஸ்ரீரங்கநாதனது செல்வம் முழுவதையும் கண்காணித்துத் திருத்தியமைத்ததால், ஸ்ரீரங்கம் தமது உடைமையாகப் பெற்ற காரணம் பற்றி **உடையவர்** என்று பெரியோர்களால் அழைக்கப் பெற்றார். இவருக்கு இன்றும் இத்திருநாமம் வழங்கி வருகின்றது. இறைவன் தன் மெய்யடியார்களது வாக்கிற்கு அளிக்கும் பெருமை, இவரைப் பற்றிய வரலாறு ஒன்றிலிருந்து மெய்யாகும்.

மகிழ்மாறன் என்ற ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வந்தார். அவர் திருப்பேர் என்ற கோவிலடியிருந்து வந்தவர். அவருக்குக் குழந்தைகள் பதினாறு பேர். அவர் தமக்கிருந்த நிலத்தை விற்று விட்டு சம்சாரத்துடனும் குழந்தைகளுடனும் ஸ்ரீரங்கத்தில் பிழைப்பதற்காக வந்தவர். அவர் சத்வகுணம் வாய்ந்தவர்; இறைவனிடத்தில் நம்பிக்கையுள்ளவர். ஒருவரிடமும் தாமாகச் சென்று தமக்கு உதவி வேண்டுமென்று கேட்காத பண்பு வாய்ந்தவர். அவரது மனைவியும் அதே மனப்பான்மை வாய்ந்தவள்; எனினும் இல்லறம் நடத்துவதற்கேற்ற பொருள் இல்லையே யென்று அவள் அடிக்கடி கவலையுறுவாள். நாளடைவில் அவர்கள் கையில் கொண்டு வந்த பொருள் முற்றிலும் கரைந்து விட்டது. பிள்ளைகளுள் மூன்று பேர், சம்பாதிக்கும் வயது வந்தவர்கள்; அவர்கள் அவ்வூரிலேயே பெரியோர்களது மாளிகைகளில் பணிவிடை செய்து தங்கள் தங்களது வயிற்றை நிறைப்பதற்கு வேண்டிய அளவே ஊதியம் பெற்று வந்தனர். மற்றக் குழந்தைகளுக்கு வேண்டிய அளவு உணவு கிடைப்பதில்லை; குழந்தைகளுக்குச் சம்பாதிக்கவும் சரியான வயதாகவில்லை. மகிழ்மாறன் ஸ்வாமி தன்னால் இயன்றவரையில் உழைத்துப் பெற்று வந்த ஊதியம் குடும்பத்திற்குப் போதாது. ஆதலால் அவரும் அவரது மனைவியும் எப்போதும் கவலைக் கடலில் ஆழ்ந்திருந்தனர்.

கோயிலில் தினம் ஸ்ரீரங்கநாதன் அமுது செய்தவற்றை (நைவேத்யம் செய்யப்பட்ட பிரசாதங்களை) அங்குக் கூடியுள்ள அடியார்களுக்கு வழங்குவது வழக்கம். அந்த வேளையில் இந்தக் குழந்தைகள் யாவரும் அங்குச் சென்று பிரசாதம் பெற்றுக் கொண்டு வயிறு வளர்த்து வந்தனர். ஆங்குள்ளவர்கள் இவர்களது நிலையை நன்குணர்ந்தவராதலின், இவர்களுக்கு அப்போதப்போது அன்னம் அளித்து வந்தார்கள். ஒரு நாள் மாலை வேளை. ரேவதிப் புறப்பாடு முடிந்த பிறகு அடியார்கள் கிளி மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். இறைவன் அமுது செய்தவைகளை அதிகாரிகள் ஏழைகளுக்கு வழங்கிக் கொண்டிருந்தனர். மகிழ்மாறன்ஸ்வாமியின் பிள்ளைகள் இருவர்—மாதவன், மதுசூதனன் என்பவர்—வினியோ

கம் செய்பவரைப் பார்த்து, "சிமாச்சு மாமா! நாங்க ரெண்டு நாளாச் சாப்படல்லே; கொஞ்சம் கூடக் கொடுங்க, மாமா!" என்றனர். எப்போதும் அவர்களிடம் கருணை காட்டும் சிமாச்சுவுக்கு அன்று ஏதோ கோபம் வந்து விட்டது. "சிமாச்சுவாம், தலைமாட்டிலிருந்து பேர் வைச்சிருக்கான் பாரு! நான்தான் தினம்அழுதுகிண்டிருக்கேனே. எவ்வளவு கொடுத்தாடா போரும் உனக்கு?" என்று மாதவனது தலையில் ஓங்கி அடித்தார். அவன் அடி தாங்காமல் கிழே விழுந்துவிட்டான். இதற்குள் அடியார்கள் கூடி விட்டனர். அவர்களுள் சிலர் "அடிபட்டது யார்?" என்றனர்; அருகிலுள்ளவர், "அந்த குசேல சுவாமியினுடைய பிள்ளை" என்றனர். மகிழ்மாறன் ஸ்வாமியே அந்த இடத்திற்கு விரைந்து தமது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு கண்ணுங்கண்ணீருமாக, வார்த்தை ஒன்றும் சொல்லாமல் அந்த இடத்தைவிட்டுப்புறப்பட்டார்.

வழியில் உடையவர் சிஷ்யர்களுடன் வந்து கொண்டிருந்தார். இவரது கலங்கிய முகத்தைப் பார்த்து யாது நிகழ்ந்ததெனக் கேட்டார். மகிழ்மாறன் சுவாமியும் உடையவரது திருவடிகளில் வணங்கி, தமது நிலையைத் தெரிவித்துச் சிறிதேனும் பேசாமல் நின்றார். உடையவரது மனம் சிறிது கலங்கியது; அவர் சிறிது நேரம் சிந்தனை செய்து, "நீர் ஏன் உமது பிள்ளையை இவ்விதம் விட வேண்டும்? ஸர்வ ரக்ஷகனை நம்பெருமாள் (ஸ்ரீரங்கநாதன்) இருக்க உமக்கு வந்த குறை என்ன? இனி நீர் உமது மனைவியுடன் ஒரு புறந் தனித்திரும். ஸர்வவித பந்துவும், ஸர்வ ரக்ஷகனும், பக்தவத்ஸலனும், ஆபத் ஸகாயனுமான எம்பெருமான் உம்மைப் பாதுகாப்பான். கவலையற்றிரும்" என்றார். இது கேட்ட மகிழ்மாறன் சுவாமி, "தந்யோஹம்; அடியேன் இவ்வாறே செய்வேன்" என்று சொல்லி மறுபடியும் உடையவரை வணங்கி விட்டுத் தமது மனையாள்மக்களுடன் வடக்குத் திருக்காவேரிக்கரையில் தாழம் புதர் ஒன்றில் தங்கி வாஸம் செய்யலானார்.

இருபத்தைந்து நாட்கள் கழிந்தன. இரவு வேளையில் உடையவர் சிஷ்யர்களுடன் கிளி மண்டபத்தில்வீற்றிருந்து கோயில் விஷயங்களைப் பற்றி விசாரித்து வந்தார். பட்டர்களுள் ஒருவர் ஓடி வந்து, "சுவாமீ! பதினைந்து நாட்களுக்குமேல் இருக்கும்; காலையில் பெருமாள் அமுது செய்வதற்காக உள்ளே வரும் தடாக்களுள் ஒன்று, பெருமாள் அமுது செய்த பிறகு மறைந்து விடுகிறது. நாங்களும் அந்த இடத்தில் மறைந்து கொண்டு பார்த்து வருகிறோம்; ஒருவரும் உள்ளே வருவதாகத் தெரியவில்லை. நேற்று பதினெட்டுத் தடா எண்ணினேன். பெருமாள் அமுது செய்த பிறகு பதினேழே இருந்தது; முந்திய நாள் இவ்வாறு ஒன்று குறைந்தது. இதனுடைய மர்மம் தெரியவில்லை" என்றார். இத் தருணத்தில் கோயிற் பரிகரங்களுள் ஒருவரான ஆச்சான் என்பவர் பெருவியப்புடன் ஓடி வந்து உடையவர் திருவடிகளில் வணங்கி, "பெரும! ஒரு விஷயம் கேட்டருள வேணும்.

எங்களால் குசேலர் என்று ஏளனம் செய்யப்பட்டு வந்த மகிழ்மாறன் சுவாமி, காவேரிக் கரையில் குழந்தைகளுடன் மகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். குழந்தைகள் களித்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர். பதினைந்து நாட்களில் அடையாளம் தெரியாதவாறு பெருத்துவிட்டனர். நான் உத்தமர் ஸந்நிதியிலிருந்து திரும்பும்போது அவர் நிஷ்டையிலிருப்பதைக் கண்டேன். நிஷ்டை கலையும்போது "எம்பெருமானார் (உடையவருக்கு வேறொரு திருநாமம்) திருவடிகளே சரணம்" என்று சொல்லிக் கொண்டு எழுந்தார். அவரை நான் க்ஷேமம் விசாரிக்கும்போது, அவர், 'எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்றிருக்கும் எனக்கு என்ன குறை?' என்றார். இது எனக்குப் பெரியதொரு அதிசயமாயிருக்கிறது" என்றார். இது கேட்ட உடையவர் தமது சிடர்களை நோக்கி, "நாளைக் காலையில் அவரைக் காண விரும்புகிறேன்" என்றார்.

மறுநாள் காலை எட்டு நாழிகை இருக்கும். இறைவன் பொங்கல் அமுது செய்து கொண்டிருந்தார். பெரிய மணியின் ஒலி நகரெங்கும் பரவிக் கொண்டிருந்தது. உடையவர் தமது சிடர்களுள் ஐவருடன் அந்தத் தாழம் புதரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். தொலைவில் மாமரத்தின் நிழலில் மகிழ்மாறன் சுவாமி நிஷ்டையில் இருப்பதைக் கண்டார். இவரைக் கண்டதும் குழந்தைகள் எழுந்தனர். அவர்களுள் ஒருவன், "ஏண்டா பத்மநாபா! இந்த மாமா இன்னிக்கு ஏண்டா வெறுங் கையோடே வரார். தினந்தோறும் உடையவர் அனுப்பினார் என்று தடாவில் சாதம் கொண்டு வருவாரே!" என்றான்.

"இன்னிக்கு உடையவரே வாராரே!"

"ஆனால் கையில் ஒன்றுமில்லை; இன்னிக்கு நம்ம பாடு பழையபடி—"

இதற்குள் குழந்தைகளுள் ஒருவர், "அப்பா! உடையவர் வரார்" என்றது; மகிழ்மாறன் சுவாமியும் நிஷ்டை கலைந்து உடையவரை நோக்கி விரைந்தார். உடையவரது திருவடிகளிலே, "எம்பெருமானார் திருவடிகளே சரணம்" என்று சொல்லியவண்ணமே விழுந்து நெடுநேரம் மூர்ச்சையுற்றிருந்தார். பின்னர் எழுந்ததும், உடையவர் அவரை நோக்கி, "சென்ற ரேவதியன்று உம்முடைய கஷ்டங்களை எல்லாம் சொன்னீரே: உம்மைப் பார்த்துப் போகலாம் என்றே வந்தேன். எப்படிக் காலக்ஷேபம் செய்கிறீர்?" என்றார்.

மகிழ்மாறன் சுவாமியும், தேவரீருடைய திருவருள் இருக்கும்போது . அடியேனுக்குக் குறை ஏது? நாள்தோறும் தேவரீர் அனுப்பும் ப்ரஸாதம் எங்களுக்குக் கிடைக்கிறது. நாளுக்கு நாள் தேவரீர் அனுப்பும் ப்ரஸாதம் சுவை ஓங்கி ஓங்கித் தெள்ளமுதுபோல் இருக்கிறது. இந்தக் குழந்தைகளைப் பார்த்தருளவேணும்; வற்றலாயிருந்த உடம்பு எப்படித் தேறியிருக்கிறது! தேவரீர் ஒன்றும் தெரியாதவர் போல் கேட்பது தான் வியப்பாயிருக்கிறது" என்றார்.

உடையவரும், "என்ன! நானு ப்ரஸாதம் அனுப்புகிறேன்? எனக்கு ஒன்றும் தெரியாதே!" என்றுர்.

மகிழ்மாறன், "இதோ பக்கத்தில் நிற்கிருரே; அவர்தான் தினம் கொண்டு வருகிருர். அவரையே கேட்டுக் கொள்ளலாமே!" என்றுர்.

உடையவர் அருகிலுள்ளவர்களில் நாலு கவிப் பெருமாள் என்பவரை நோக்கி. "என்ன! நீரா தினம் ப்ரஸாதம் கொண்டு வருகிறீர்?" என்று கேட்டார்.

"இவரேதான்! தினம் ஒரு தடாவில் வருகிறது; இவர் தான் தேவரீர் ஆணைப்படி கொண்டு வருவதாகச் சொன்ஞர்," என்றுர் மகிழ்மாறன் சுவாமி.

"எனக்கு ஒன்றுந் தெரியாது; நான் இவர் இருக்கும் இடத்தையும் அறிந்தவனில்லை" என்றுர் நாலு கவிப் பெருமாள்.

"கோயிலில் தினம் ஒரு தடாவில் ப்ரஸாதம் மறைந்து விடுகிறதாம்; இவருக்கு தினம் ஒரு தடா வருகிறதாம்; அதை நீர் கொண்டு வருகிறீராம். எல்லாம் ஆச்சரியமாகவன்றே இருக்கிறது!" என்றுர் எம்பெருமானுர்.

மகிழ்மாறன் சற்று உற்று நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தார். அவருக்கு எதிரில் நின்று கொண்டிருந்த நாலு கவிப் பெருமாளைக் காணவில்லை. சிறிது தொலைவில் அதே நாலு கவிப் பெருமாள் தமது தலையில் ஒரு தடாவில் ப்ரஸாதத்துடன் தன்னை நோக்கி வருவதைக் கண்டார்,

"நாலு கவிப் பெருமாள்!" என்று கூப்பிட்டார் உடையவர். பதில் இல்லை; சுற்றிப் பார்த்தார், தொலைவில் அவரைக் கண்டார். "நாலு கவிப் பெருமாள்! உமக்கு ஒன்றும் தெரியாது என்றீரே! எங்கிருந்து வந்தது தடா? அதற்குள் எப்படி எடுத்து வந்தீர்?" என்று கேட்பதன்முன் யாவரும் எதிரில் அழகிய மணவாளனது திருவுருவைக் கண்டனர்; அந்தத் திசையை நோக்கிக் கீழே தண்டனிட்டு வணங்கினர். உடையவர்களுடைய சீடர்களுள் ஒருவர் உடையவரைநோக்கி, "சுவாமீ! அன்று தேவரீர் அருளியதை மெய்யாக்கி விட்டான் ஸர்வ ரக்ஷகன் 'எம்பெருமான் உம்மைப் பாதுகாப்பான்' என்று அன்று தேவரீர் அருளிச் செய்தது நினைவிலிருக்கட்டும்" என்றுர்.

*

**கரி மனிதன்**

ஆள பாத்தா சக்க சவேல்னு ராஜாவாட்டம் இருக்காரு....துணி பாத்தா அழுக்கு வழியுதே. தோச்சு கட்ட மாட்டாறு.

அட நீ ஒண்ணு......
அவரு கரி கடங்கு குமாஸ்தாப்பா...

# ★ சாந்தா ★

— நீலா ராமமூர்த்தி —

★

“அடி சாந்தா ஆற்றங்கரைக்குப் போய் ஒரு குடம் ஜலம் கொண்டு வா’ என்று கட்டளையிட்டாள் சௌந்தரம். வெளியே தெரியும் காரிருளைக் கண்டு பயந்த சாந்தா கெஞ்சிய குரலில் “சித்தி இன்று அமாவாசை இருட்டாயிற்றே ஆற்றங்கரைக்கு தனியாய்ப் போக எனக்கு பயமாயிருக்கிறதே” என்றாள். “சீ அனாதைப் பிண்டமே என்ன பயம் உனக்கு? போ” என்று கத்திய சௌந்தரம் இரு தவலைகளை கொணர்ந்து சாந்தாவிடம் கொடுத்தாள். தலைவிதியை நொந்து கொண்டே தவலைகளுடன் வாசற்படி தாண்டினாள். படீரென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே சென்றாள் சௌந்தரம். கண்ணீர் வழியக் குடத்துடன் போய்க் கொண்டிருந்த சாந்தா “யாரடியம்மா போறது” என்ற குரலைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள். ஒரு வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்திருந்த சித்தியின் எதிரியான காமுப்பாட்டியைப் பார்த்ததும் சிறிது தைரியமடைந்தவளாய், “பாட்டி நான் தான் சாந்தா” என்றபடி நெருங்கினாள். “சாந்தாவா அடி பாவிப் பெண்ணே மணி பத்தாகிறதே பேய்கூடப் புறப்பட பயப்படும் இந்த நள்ளிரவில் உன்னை அனுப்ப அந்தக் கொடும் பாவிக்கு எப்படி மனசு வந்தது? உன் தாயார் இருந்தால் இப்படி நடக்குமா? உட்காரம்மா” என்றாள். “ஐயோ பாட்டி! நாழியாகி விட்டது. சித்தி கோவிச்சுப்பா” என்றபடி புறப்பட்டாள் சாந்தா. “சாந்தா ரொம்ப நாளாய் உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்லணுங்கர ஆசை” என்று தயங்கினாள் காமுப்பாட்டி. “பாட்டி எனக்கும் உங்களிடம் ஒரு விஷயம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல்தான்” என்று சாந்தா முடிப்பதற்குள், “உன்னைம்படையானைப் பற்றித்தானே” என்று குறுக்கிட்டாள் காமுப்பாட்டி. சாந்தாவின் கண்ணில் ஜலம் வழிந்தது. “ஆம் பாட்டி அதுதான். அவர் எங்கே சொல்லுங்களேன்” என்றாள் சாந்தா அடக்க முடியாத ஆவலுடன்.

“சாந்தா நீ இன்னமும் விவரம் தெரியாத குழந்தை இல்லை. சௌந்தரம் உன்னை ஏமாற்றி விட்டாள். உன்னர்படையான் பட்டணத்திலே பெரிய உத்தியோகத்திலிருப்பதாக கேள்வி. அவனிடம் நீ செத்துப் போய் விட்டாய் என்று சொல்லி விட்டு தன் பெண்ணை அவனுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறாள். முகூர்த்தம்கூட வைத்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். இனியும் நீ பேசாமலிருந்தால் உன் கதி அதோகதிதான். சாந்தா! எப்படியாவது அவனைக் கண்டு பிடித்து சேர்ந்து கொள்” என்றாள் காமுப்பாட்டி.

சாந்தாவின் தலை சுழன்றது. “ஆகட்டும் பாட்டி. வரட்டுமா” என்று விடை பெற்ற சாந்தா ஆற்றங்கரையை யடைந்தாள். எங்கோ கோட்டான் அலறியது, நாற்புறமும் பார்த்த சாந்தா மள மளவென்று ஆற்றில் இறங்கினாள். ஆற்றங்கரை பிள்ளையார் கோவிலை நோக்கித் தன் கரங்களை கூப்பி

ளுள், 'யானை முகனே! பார்வதி பாலா! நான் செய்யப் போகும் பாபத்தை மன்னித்து நல்ல கதி கொடு. சிறகொடிந்த பறவை போன்ற நான் இனி வாழ்ந்து என்ன பிரயோஜனம்? ஒரு நாள் விடியும். அவர் வருவார்; சுகப்படுவேன் என்று கனவு கண்டு கொண்டிருந்தேன்.

சித்தியின் சதி தெரிந்தது' ஆனால் என்ன செய்வேன். அவரிடம் பொய் சொல்லி தன் பெண்ணைக் கொடுக்க நினைத்தாளே; அப்படிப்பட்டவள் எனக்கு வாழ்வளிப்பாளா? காந்தாவிற்கு குறுக்கே நிற்க என்னால் முடியுமா? பாவம் அவளாவது சுகப்படட்டும். அவளும் என் தங்கைதானே. நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். அடுத்த ஜன்மத்திலாவது என் வாழ்க்கை பூர்ண இன்பம்பெறவேண்டும்' என்று தனக்குள் ப்ரார்த்தித்துக் கொண்ட சாந்தா, ஆற்றங்கரையை யடுத்த சாலையில் ஜல் ஜல் என்ற இரட்டை மாட்டு வண்டி ஒன்று வருவதைப் பார்த்து திடுக்கிட்டபடி ஜலத்தில் மூழ்கினாள். வண்டி அவசரமாய் வருவதை யறிந்த சாந்தா மறுபடியும் கரையேறி கோவில் மண்டபத்தை யடைந்தாள். வண்டியிலிருந்து யாரோ இறங்கியது தெரிந்தது. கண்களை இறுக மூடி கரம் குவித்த சாந்தா மறு நிமிஷம் ஆற்றில் குதித்துவிட்டாள். 'வேண்டாம் வேண்டாம்' என்று ஒரு குரல். உடனே வண்டியிலிருந்து இறங்கிய ஒரு வாலிபன் ஆற்றில் குதித்து சாந்தாவின் தலை மயிரைப் பிடித்துக் கொண்டான், சில நிமிஷங்களில் சாந்தாவுடன் கரையேறினான். 5 நிமிஷங்களுக்குப் பின் தான் பிழைத்து விட்டோம் என்றறிந்த சாந்தா வெட்கமும், வெறுப்புமடைந்தவளாய் கண்களைத் திறக்க, ஒரு யுவன் டார்ச் லைட் அடிப்பதைப் பார்த்து திடுக்கிட்டாள். பயத்துடன் எழுந்திருக்க முயன்றாள். முடியவில்லை. உடம்பில் பொறுக்க முடியாத வலி. ஒரு விதகிலி. "எழுந்திருக்க வேண்டாம்" என்று பரிவான குரல் கேட்ட சாந்தா திகைத்தாள். "என்னை யார் காப்பாற்றியது! நான் எங்கே இருக்கிறேன்!" என்று கலங்கிய சாந்தா, தான் ஒரு அன்னிய ஆடவன் மடியில் படுத்திருப்பதைப் பார்த்து அனலிடைப் பட்ட புழு போல் திடுக்கிட்டு எழுந்துவிட்டாள். 'ஐயோ இந்த ஸ்திதியில் என்னை யாராவது பார்த்திருப்பார்களோ! இதுவரை பரிசுத்தமாக யிருந்த உடல் களங்கமடைந்து விட்டதே! ஈசா இதுவும் ஒரு சோதனையா அல்லது என் தலைவிதியா? சீ! என்ன ஜன்மம்; என்னைத் தீயிலிட்டாலும் தோஷமில்லையே' என்றுஎண்ணி பதறிய சாந்தா ஒன்றும் தோன்றாமல் தலை குனிந்தாள். 'அம்மா! என்ன காரியம்செய்யத்துணிந்தீர்கள்' என்றான் டார்ச் லைட் பிடித்த வாலிபன்.

சாந்தா சலிப்புடன், "ஐயா நீங்கள் யார்? என்னை ஏன் காப்பாற்றினீர்கள்? என்ஸ்திதியில் வேறொரு பெண்ணானால் உங்களுடைய தீரச்செயலுக்கு நன்றி கூறி யிருப்பாள். இந்த அபாக்யவதிக்கு வருத்தம் தான் ஏற்படுகிறது. இந்த உலகில் ஒரு அனாதைப்பெண்ணிற்கு சாகக்

கூட சுதந்திரம் கிடையாதா? உங்களுடன் தனித்திருக்கும் என்னை யாராவது பார்த்தால் நாளைக்கு இந்த ஊரார் உயிரோடு கொன்று விடுவார்கள். மகா பாபாத்மா வானதால் தான் உங்களால் காப்பாற்றப் பட்டேன். ஐயா தயவு செய்து என்னை என் வழியில் விடுங்கள்'' என்றாள் சாந்தா.

அவளைக் காப்பாற்றியவன் பரிவான குரலில், "அம்மா தற்கொலை மகா பாபமில்லையா? இப்படிப்பட்ட வெறுப்புக்குக் காரணம் என்ன? இந்த பரந்த உலகில் ஒவ்வொருவரும் வாழ வழி தேடுவார்களே தவிர சாக வல்ல. மனிதனுக்கு கஷ்ட சுகம் ஒரு நிலையில்லை. இந்த பயங்கர இரவு மறைந்து பொழுது எப்படி விடிவது நிச்சயமோ அப்படியே உங்களுக்கு நல்ல காலம் வருவதும் நிச்சயம்'' என்றான்.

அமைதி யடைந்த சாந்தா மறு பேச்சின்றி ஜலத்துடன் வீடுசென்றாள். "யாருக்கடிஸ்னானம்" என்றதட்டினாள் சித்தி. 'படித்துறை வழுக்கிவிட்டது' என்ற சாந்தா மாற்றுடையணிந்து படுக்கைக்குச் சென்ற போது படபடவென்று யாரோ வாசற் கதவை இடித்தார்கள். கதவைத் திறந்த சௌந்தரம் ஸ்தம்பித்து விட்டாள். தடதடவென்று உள்ளே நுழைந்த வாலிபர்களின் முகம் கோபத்தால் சிவந்திருப்பதைக் கண்ட சௌந்தரம் ஒருவாறு மனதை திடப்படுத்திக் கொண்டு 'வாங்கோ வாங்கோ' என்றாள். சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்த சாந்தா சற்று முன் தன்னைக் காப்பாற்றியவர்களே அவர்கள் என்று அறிந்து திடுக்கிட்டாள். என்ன இப்படி திடீர்னு காந்தாவைப் பார்க்க வந்தீர்களா என்று குழறினாள் சௌந்தரம். 'சௌந்தரத்தம்மா, போதும் நாடகம்; எங்கே என் பெண்டாட்டி' என்று கத்தினான். வந்தவரில் சற்று மூத்தவனாகக் காணப்பட்ட தியாகராஜன், 'பெண்டாட்டியா! யாரப்பா அது?' என்றாள் சௌந்தரம் கேலியாக.

"செத்துப் போயிட்டாள்னு சொல்லி என்னை ஏமாற்றப் பார்த்தேளே! சற்றுமுன் குடத்துடன் உள்ளே வந்தாளே! அவளைத்தான் மரியாதையாக அனுப்பறேளா அல்லது...'' என்று உறுமினான் தியாகராஜன்.

"இதென்னவேடிக்கை! செத்துப் போனவள் எப்படி உயிரோடு வருவாள்? என் பெண் காந்தான்னா ஜலம் கொண்டு வந்தவள்!'' என்று சிரித்தாள் சௌந்தரம்.

மறைவிலிருந்த காந்தாவின் மனம் துடித்தது. உண்மை விளங்கியதும் அவமானத்தால் சுருங்கியது அவள் உடல். 'அம்மாவின் பண ஆசைக்கு எல்லையே கிடையாதா? அது அவளை எவ்வித பயங்கரமான வழியில் கொண்டு போகிறது; மூத்தாள் பெண்ணான அவளை ஒரு ஏழைப் பிள்ளைக்குக் கொடுத்து வாழ விடாமல் அடித்தாள். அம்மாவின் பிடுங்கலை சகியாமல் மிலிட்டரியில் சேர்ந்த அவர், நாலே வருஷத்தில் பணக்காரராகி வீடு வந்த போது, சாந்தா இறந்து விட்டதாகக் கூறிவிட்டாள். அதை உண்மை என்று நம்பிய அவர் சென்னையிலுள்ள ஒரு கம்பெ

னியில் உத்தியோகமேற்று வாழ்க்கை நடத்திய போது, என்னையே அவருக்குக் கொடுக்க ப்ளான் போட்டு விட்டாள். சீ! என்ன ஜன்மம். உயிரோடு இருக்கும் ஒரு பெண்ணின் வாழ்வில் மண்ணைப் போடப் பார்க்கிறாளே; இவளும் ஒரு தாயா' என்று நினைத்தாள் காந்தா.

தாயை எதிர்த்து அவளுக் குத் தீராத பழியையும் ஏற்படுத்த அவள் மனம் துணியவில்லை. சாந்தாவும் அவளைத் தடுத்தாள்.

கூட வந்தவனின் ஜாடையை யறிந்த தியாகராஜன, "அபபடீன்னு சாந்தா இல்லையா" என்ருன்.

"இல்லையேப்பா; காந்தாவைக் கூப்பிடட்டுமா!" என்ற சௌந்தரம் நல்ல மூச்சு விட்டாள்.

"வேண்டாம் வேண்டாம், நாளைக் காலை வரேன்" என்று கூறியபடி புறப்பட்டான் தியாகராஜன்.

"மாப்பிள்ளை! காந்தாவையும் பார்க்காமல், கல்யாணத்திற்கு எப்போ முகூர்த்தம் வைப்பது என்பது பற்றியும் சொல்லாமல் போறேளே... என்னமோ அந்த பாவி தான் கொடுத்து வைக்க வில்லை...... காந்தாவிற்காவது உங்களை கணவனுய் அடையும் பாக்யம் கிடைக்கட்டும்" என்ற சௌந்தரம் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

தியாகராஜன் அடுப்பங்கரையை ஒரு பார்வை பார்த்து விட்டு நண்பனுடன் புறப்பட்டான்.

அவர்கள் தலை மறைந்ததும் கதவைத் தாளிட்டுக் கொண்ட சௌந்தரம், "அடி சாந்தா! சரியா நாலு மணிக்குத் தயாராயிரு. பக்கத்தூரில் உன்னைக் கொண்டு விடப் போகிறேன்" என்ருள்.

"அம்மா! உன் செய்கையை நான ஒப்புக்கொள்ளவே மாட்டேன்" என்று ஆரம்பித்த காந்தாவை ஒரு அதட்டல் போட்டாள் சௌந்தரம்.

'சாந்தாவை எப்படிக் காப்பாற்றுவது?' என்று யோசித்தபடி வாசற் கதவைப் பூட்டப் போன காந்தா கீழே கிடந்த ஒரு துண்டுக் கடிதத்தைப் பார்த்ததும் படித்தாள் பரபரப்புடன்.

சாந்தா,

இரவு இரண்டு மணிக்கு காமுப் பாட்டியின் வீட்டிற்கு வா.

**தியாகராஜன்.**

அம்மாவிற்குத் தெரியாமல் கடிதத்தை சாந்தாவிற்குக் காட்டினுள்.

சாந்தாவின் மனம் சிறகில்லாமல் பறந்தது. இரவு இரண்டு மணிக்கு காந்தாவின் உதவியால் காமு பாட்டியின் வீட்டை யடையத் தயாராயிருந்த டாக்ஸியில் தியாகராஜனுடன் காமுப் பாட்டியின் ஆசியுடன் பறந்தாள் சாந்தா. சரியாக நாலு மணிக்குக் கண் விழித்த சௌந்தரம் சாந்தாவைக் காணுது திடுக்கிட்டாள். பதறினுள். தன் எண்ணத்தை எல்லாம் சிதறவடித்துவிட்டு தியாகராஜனுடன் ஓடி விட்டாள் சாந்தா என்று அறிந்து கொண்ட சௌந்தரம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதாள்.

ஒன்றுமறியாதவள் போல் காணப்பட்ட காந்தா தாயைத் தேற்றினுள்.

மூன்று நாட்களுக்குப் பிறகு சாந்தாவிடமிருந்து கடிதம் வந்தது.

"சித்தி! என் செய்கைக்கு மன்னிக்கவும். நான் அவருடன் சௌக்யமாயிருக்கிறேன். காந்தாவை அவருடைய நண்பருக்குக் கொடுத்து விடுங்கள். காலணு செலவு கிடையாது. பிள்ளை தங்கக் கம்பி. நல்ல பணக்காரன்" என்று எழுதியிருந்ததைக் கண்ட சௌந்தரம் மண்ணை வாரியிழைத்தாள். "இவள் சொல்வதைக் கேட்க பைத்தியமா எனக்கு" என்றுள்.

"அம்மா அவரைத்தான் எனக்குப் பிடிக்கிறது. தடுத்தால் ஓடி விடுவேன்" என்றுள் காந்தா.

விக்கித்துப் போன சௌந்தரம் மறு பேச்சின்றி சம்மதித்தாள். அதைக் கேள்விப்பட்ட காமுப்பாட்டியின் மனம் பூரித்தது. பட்ட மரம் துளிர்த்தது போல் காமுப் பாட்டியின் தயவால் மனைவியை யடைந்த தியாகராஜனின் வாழ்க்கை ஆனந்தமயமாகியது. 'சாந்தா உயிரோடு இருக்கிறுள் காப்பாற்று' என்று அவள் அவனுக்குக் கடிதம் எழுதியிராவிட்டால் சாந்தாவின் வாழ்க்கை சுகமேது? காந்தாவிற்குத் தான் விடுதலை ஏது? சௌந்தரத்தின் புத்திதான் நல்வழியில் திரும்பி யிருக்குமா?

○



# பாரதப் பூங்கா

—வசுமதி ராமசுவாமி—

★ ★

பஞ்ச பாண்டவர்களை வளர்க்கும் மகத்தான பொறுப்பை குந்தி ஏற்றுக் கொண்டாள். கணவனை இழந்த வருத்தத்தை ஒருவாறு ஒதுக்கிவிட்டு கடமையைச் செய்ய முன் வந்தாள். அரச குமாரர்களான சிறுவர்கள் ஐவரும், துரியோதனாதிகள் நூறு பேர்கள் ஒன்ருக வித்தை பயின்றனர். குரு எந்த வித்தையைக் கற்றுக்கொடுத்தாலும் பாண்டவர்கள் உடனே அதில் தேர்ச்சி பெற்று விடுவார்கள். அதே வித்தையை கௌரவர்களுக்கு எவ்வளவு நாள் சொல்லிக் கொடுத்தாலும் வராது.

பீமன் பாண்டவர்களுக்குள் தேக பலத்திலும், மனோ பலத்திலும் விசேஷமானவன். அவனுடைய தேக பலத்தைப்பற்றி ஒரு சின்ன கதை சொல்வதுண்டு. பீமன் சின்ன குழந்தையாக இருக்கும்போது குந்தி கை தவறி ஒரு பாறையின் மேல் குழந்தையைப் போட்டு விட்டாள். தாய் ஒரு நிமிஷம் துடித்துப் போய் விட்டாள். குழந்தை இறந்து விட்டது என்று நினைத்து கண்களை இறுக மூடிக் கொண்டு விட்டாள். அதற்கேற்ருற்போல் குழந்தையின் அழுகைக் குரல் கூடக் கேட்கவில்லை. பிறகு பயந்து கொண்டு கண்ணைத் திறந்து பார்த்தாள். என்ன ஆச்சரியம்! குழந்தை கை கால்களை உதைத்து, சிரித்துக்கொண்டு விளையாடியது. பாறை சுக்குநூருக உடைந்திருந்தது. இவ்வளவு பலம் வாய்ந்த குழந்தை பீமன்.

பீமன் அடிக்கடி கௌரவர்களுடைய மூடத்தனத்தைக் கேலிசெய்வதும், கிண்டல் செய்வதுமாக இருந்தான். துரியோதனனுக்கு அவனிடம் அசூயை பிறந்தது. நாளடைவில் அசூயை குரோதமாக மாறியது பீமனைக் கொன்று விடவேண்டும் என்ற அளவுக்கு வளர்ந்தது. மேலும் துரியோதனனுக்கு யுதிஷ்டிருக்கு யுவராஜ்யப் பட்டாபிஷேகம் ஆகிவிட்டால் தனக்கு கதி இல்லை என்ற எண்ணமும் தோன்றியது. முளையிலேயே பாண்டவர்களைக் கிள்ளி எறிய வேண்டும், பீமனைக் கொன்று மற்றவர்களை சிறையில் அடைக்க வேண்டும் என்று திட்டம் செய்தான்.

ஒருநாள் பீமன் சாப்பிடும் உணவில் துரியோதனன் விஷத்தைக் கலந்து விட்டான் ஓடிக் களைத்திருந்த பீமன் உணவு முழுவதையும் சாப்பிட்டான். சிறிதுநேரத்தில் மயக்கமடைந்துவிழுந்து விட்டான். துரியோதனன் பீமனைத் தூக்கி நட்டிருந்த சூலத்தில் எறியச் செய்தான். ஆனல் தெய்வச் செயலாக, தூக்கி எறியும் பொழுது சூலத்திற்கப்பால் உள்ள குட்டையில் விழுந்

தான். குட்டையில் உள்ள விஷப் பாம்புகள் அவனைக் கடித்தன. பாம்பின் விஷம் அவன் உடலில் ஏறிய விஷத்தை சமனமாக்கி விட்டது. பீமன் தூங்கி எழுந்தவனைப் போல் விழித்துக் கொண்டான். பீமனைக்கொல்ல துரியோதனன் இப்படி எவ்வளவோ முயற்சிகள் செய்தான். ஆனால் பயனில்லை. அஞ்ஞாதவாசத்தின் போதும் பீமன் விராட நகரத்தில் சுயம்பாகியாக இருந்து அனேக அற்புத செயல்களைச் செய்திருக்கிறான்.

தருமர் சூதாட்டத்தில் தன் மனைவியையும் பயணம் வைத்து ஆடி தோல்வியுற்ற பொழுது பீமன் கொதித்தெழுகிறான். ஆனால் அண்ணாவின் வார்த்தைக்கு மறு சொல் பேசாமல் தலை குனிந்து காடு செல்கிறான்.

பீமனுடைய பக்தியைப் பற்றியும் கர்ண பரம்பரையில் அழகான கதை ஒன்று உண்டு. ஒருசமயம் கிருஷ்ணனும், அர்ஜுனனும் உலாவிக் கொண்டு போகிறார்கள். அர்ஜுனன் கிருஷ்ணனிடம் 'பூஜா காலம் நெருங்கி விட்டது, வீட்டிற்குப் போகவேண்டும்' என்கிறான். அவன் மனதில் தான் செய்யும் பூஜை பக்தியைப் பற்றி கொஞ்சம் அகம்பாவம் இருந்தது. ஸர்வாந்த்ரியாமியாக இருக்கும் கிருஷ்ணர் அதை அறிந்தார். அத்துடன் பீமனுடைய அடக்கமான பக்தியையும் அர்ஜுனனுக்கு காட்ட நினைத்தார். "அர்ஜுனா, நீ பூஜை செய்வது பிறகாகட்டும். பீமஸேனன் செய்த பூஜையை பார்த்து விட்டு வரலாம் வா" என்றார்.

அர்ஜுனன் ஏளனமாகச் சிரித்துவிட்டு "பீமனுக்கு பூஜையும், பக்தியும் ஏது? அவனுக்கு சாப்பாடும், தூக்கமும் தான் பூஜையாகும். கண்ணா, அவன் ஒருவேளை உன்னை ஆராதித்ததை ஒருவருமே பார்த்ததில்லை" என்றான்.

கண்ணன் புன்சிரிப்புடன், "நீ என்னுடன் வா" என்றழைத்துக் கொண்டு போனார். அடர்ந்த காட்டுப் பாதை. அதன் நடுவில் ஒரு அழகிய கட்டிடம் இருந்தது. கிருஷ்ணர் அந்தக் கட்டிடத்திற்குப் போய் வாயில் கதவைத் திறந்தார். உள்ளேயிருந்து பல மலர்களின் பரிமளம் வீசியது. தூப, தீபத்தின் வாசனைப் புகை கமழ்ந்தது. கூடத்தில் நடுவே தேஜோமயமான மண்டபம். அதன் நடுவில் புஷ்பங்கள் குவியல்களாக நிறைந்திருந்தன. அந்தப் புஷ்பத்திற்கிடையில் கிருஷ்ணருடைய திரு உருவம் சிலையாக அமைக்கப்பட்டிருந்தது. இதைப் பார்த்து அர்ஜுனன் பிரமித்து விட்டான்.

கிருஷ்ணர் அர்ஜுனன் பக்கம் திரும்பி, "பார்த்தாயா, இதுதான் பீமஸேனன் செய்யும்பூஜை. அவன்

# பொன்னி

— அருளாளன் —

★

விடுமுறை நாள் என்ற காரணத்தால் பகல் 12 மணிக்குக் கட்டிலில் படுத்தவன் அயர்ந்து உறங்கி விட்டான் அன்பரசு. எதிரே இருந்த கடிகாரம் 4-மணி என்று காட்டிற்று. சற்று சுரு சுருப்பாக எழுந்திருந்து ஒரு துண்டை எடுத்து மேலே போட்டுக் கொண்டு, கையிலே சோப்பு பெட்டியுடன் புறக்கடை பக்கம் சென்றான். முகம் கழுவிய பிறகு வேற்றுடை அணிந்து, கடைத் தெருவிற்குச் சென்று, ஏதேனும் சிற்றுண்டி சாலையில் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு, கடற்கரைக்கு போகலாம் என்று திட்டமிட்டான் அன்பரசு. அன்று அவனுக்கு விடுமுறைநாளாதலால் விசேஷ நிகழ்ச்சி ஒன்று இருந்தது. அதுதான் பொன்னியை சந்திப்பது.

பொன்னியின் வீடு மாம்பலத்தில் இருக்கிறது. அன்பரசுக்கும் பொன்னிக்கும் உள்ள நட்பின் அஸ்திவாரம், ஏறத்தாழ 8 ஆண்டுகள் பழக்கம். அன்று சின்னசின்ன வீடுகட்டி விளையாடியவர்கள் தான் இன்று சிங்கார வாழ்வு வாழ விரும்பினார்கள். தஞ்சையில் அடுத்தடுத்த வீடுகளில் வாழ்ந்த குடும்பங்கள் தான் பொன்னியின் குடும்பமும் அன்பரசின் குடும்பமும். சின்னஞ் சிறு பருவம் முதல் ஒருவர்மேல் ஒருவர் நேசமும்பாசமுமாய் வளர்ந்தவர்கள் அன்பரசும் பொன்னியும். வளர்பிறை மதியாய் வளர்ந்த அவர்கள் நட்பு உரிய காலத்தில் காதல் மலராய் எழில் மணம் வீசிற்று. பள்ளி படிப்பை முடித்த அன்பரசு சென்னையிலே சர்க்கார் அலுவலகம் ஒன்றில் வேலைப்பார்த்து வந்தான். அவனுடைய பொருளாதார வசதி குறைவால் அவனால் கல்லூரி படிப்பை தொடங்க முடியவில்லை. ஆனால் அவனுடைய காதலின் வளர்ச்சி தடைபடவில்லை. பொன்னி பணத்திற்காகவோ பட்டதாரி என்ற படாடோபத்திற்காகவோ மன வலிமையை இழக்கும் மனப்பண்பு உடையவளல்ல. அவள் உண்மை காதலுக்கு தலை வணங்குபவள். அத்தகைய மன வளத்தை அவள் அடைந்ததற்கு காரணம், அவளுக்கு தமிழ் இலக்கியத்திலுள்ள பற்றும், தேர்ச்சியும்தான். அவள் இலக்கியத்தில் கண்ட அன்பு உணர்ச்சி வாழ்க்கையிலும் பிரதிபலித்தது.

சிற்றுண்டிச்சாலையிலிருந்து வெளியே வந்த அன்பரசின்

---

உத்தமன். ஆடம்பரமற்றவன். அவன் தினமும் இவ்வாறு மானசீகமாக என்னைப் பூஜிக்கிறான்" என்றார்.

அர்ஜுனன் பீமனுடைய பக்தியைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அதே சமயம் தன்னுடைய அகம்பாவத்தையும் நினைத்து வெட்கினான்.

பீமன் பிறகு யுத்தத்திலும் அசகாயச் செயலை செய்திருக்கிறான். எதிரி அனேகரை வெட்டி வீழ்த்தி இருக்கிறான். பீமஸேனன் பாரதப் பூங்காவில் வைரம் பாய்ந்த கருங்காலி மரத்தைப் போன்றவன்.

கால்கள் தானாகவே கடற்கரை நோக்கிச்சென்றன. ஞாயிற்றுக் கிழமையாதலால் கடற்கரை மிகவும் சுறுசுறுப்பாக இருந்தது. காதலர் ஜோடிகள், மணமான தம்பதிகள், சிறுவர்கள், காதலுக்கு ஏங்கி வண்ணப் புருக்களை வட்டமிடவரும்வாலிபர்கள், காதலில் தோல்வியுற்று அந்த உள்ளத் தளர்ச்சியை போக்க மன அமைதிக்காக குமுறும் கடல் அலையோடு தன் மன அலையை மோதவிட்டு சற்றேனும் உள்ளம் அமைதி பெற விரும்பும் காதல்தோல்வியாளர்கள் முதலிய பல ரகத்தைச் சேர்ந்த மக்கள் கூட்டம் கூட்டமாக முட்டிக்கொண்டும் மோதிக்கொண்டும் கடலோரம் நோக்கி விரைந்தனர். அத்தகைய கூட்டத்தில் ஒருவனாய் அன்பரசும் கடற்கரை நோக்கிச் சென்றான் தன் கண்ணின்மணியைக் காண்பதற்காக.

பொன்னியும் அன்பரசும் வழக்கமாக சந்திப்பதற்காக ஒரு இடம் உண்டு. மாம்பலத்திலுள்ள தனது இல்லத்திலிருந்து 12-ம் எண் பஸ்ஸில் ஏறி மேரி ராணி கல்லூரிக்குப் பக்கத்தில் இறங்கி அந்தக் கல்லூரிக்கு முன் மணற்பரப்பில் அன்பரசின் வருகைக்காகக் காத்திருந்தாள் பொன்னி.

அந்த இடம் அதிகக் கூட்டமில்லாத இடம். காதலர்கள் மாற்றாரின் தொல்லையில்லாது மனம் விட்டுப் பேசி மகிழ ஏற்றச் சூழ்நிலை அமைந்ததாய் இருந்தது. அன்பரசு பொன்னி காத்திருந்த இடத்துக்கு வருகிறபொழுது அவளைச் சுற்றி சில பெண்கள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அன்பரசு அந்த இடத்தை நெருங்கிக்கொண்டிருக்கவும் பொன்னியைச் சுற்றியிருந்த பெண்கள் ஒருமுறை அன்பரசைத் திரும்பிப் பார்த்து மீண்டும் பொன்னியையும் ஒருமுறை பார்த்துவிட்டு கலகலவென்ற சிரிப்பொலியோடு ஏதோ பொன்னியிடம் கூறி அந்த இடத்தை விட்டு எழுந்து சென்று விட்டனர்.

அன்பரசு பொன்னியின் பக்கத்தில் அமர்ந்தான்.

'என் பொன்னி... நீண்ட நேரமாக காத்திருக்கிறாயா?'

'அதிகமில்லை......10 நிமிஷங்கள் தானிருக்கும்.'

'என்னைக் கண்டவுடன் ஏதோ குறிப்புக் காட்டி உனது தோழியர்களுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டாய் போலிருக்கிறதே!'

'நான் குறிப்புக் காட்டத் தேவையில்லை. அவர்களே குறிப்புணரும் பண்புடையவர்கள் தான்'—பொன்னி.

'பொன்னியின் தோழியர்கள் என்றால் பின் எப்படி இருப்பார்கள்? கற்றாரை கற்றாரே காமுறுவர்'—அன்பரசு.

'புகழ்மாலை படலம் துவக்கமாகிவிட்டதா—இனிஎன் பாடு ஆபத்துதான்—நேரம்ஆகஆக உச்சநிலைக்குப் போய்—பிறகு நான் என்ன ஆவேனோ'—பொன்னி.

'அப்படியொன்றுமில்லை பொன்னி. உள்ளதைத்தானே சொன்னேன். சில குறிப்புணராததுகள் அதுகள் இஷ்டம் போல் பேசிக்கொண்டேயிருக்கும். ஆனால் அதுபோலில்லை உனது தோழியர்கள் என்றுதான்சொன்னேன். சரி. வேறு என்ன விஷயம்?'—அன்பரசு.

'நேற்றைய முன் தினம் கல்லூரித் தமிழ் வகுப்பில் குறுந்தொகையைப் பற்றிய பாடம்--பொன்னி.

'ஆசிரியர் என்ன சொன்னர்' அன்பரசு.

''பிரிவுத் துயரால் அவதியுரும் காதலர்களின் மன நிலையைப் பற்றி படம் பிடித்துக் காட்டினர். உண்மையிலேயே பிரிவுத் துயரால் வாடும் தற்கால காதலர்களுக்கு குறுந்தொகைகைப் படிப்பது சற்று ஆறுதலளிக்கும் என்பது எனது நம்பிக்கை. நீங்கள் என்ன கருதுகிறீர்கள்'' பொன்னி.

'அத்தகைய பிரிவுத் துயர் அனுபவம் எனக்கு அதிகம் ஏற்படுவதில்லை. அநேகமாக வாரத்தில் இரண்டு மூன்று முறை நாம் சந்தித்து விடுகிறோம் அல்லவா. என்றாலும் பிரிவுத் துயரைப் போக்கும் அருமருந்து குறுந்தொகை என்பது என்னுடைய உறுதியான எண்ணம்தான்' அன்பரசு.

இப்படியே பலரகப் பட்ட விஷயங்களைப் பற்றி இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சின் நடுவே அன்றைக்கு முதல்நாள் நடந்த ஒரு சம்பவத்தைச் சொன்னன் அன்பரசு.

'பொன்னி, நேற்று நான் மவுண்ட்ரோட்டில்வந்துகொண்டிருந்தேன். என் பக்கத்தில் ஒரு கார் மெதுவாக சென்று கொண்டிருந்தது. அதிலிருந்து ஒரு இளம் பெண் என் பெயரைச் சொல்லி கூப்பிடுவது போலிருந்தது. பக்கத்தில் போய் பார்த்தால், அந்தக் காரில் இருந்தது மல்லிகா. நாம் தஞ்சையில் இருந்த பொழுதுநாம்இருந்ததெருவில், கடைசி வீட்டில் இருந்தாளே அவள்தான். அவள் இங்கு கல்லூரியில் படிக்கிருளாம். கோடம்பாக்கத்தில் இருக்கிறதாம் அவள் வீடு. நீ கூட முன்பெல்லாம் கூறுவாயே, 'அவள் மிக ஆடம்பரக்காரி' என்று! அவளேதான்! இப்பொழுது அவள் எவ்வளவு சாந்தமாக போய் விட்டாள் தெரியுமா? முன்பெல்லாம் எவ்வளவு கர்வமாக இருப்பாள்-இப்பொழுது எப்படி மாறிவிட்டாள். பேச்சில் ஒரு அடக்கம் மரியாதை, இனிமை—நானே ஆச்சரியப் பட்டு விட்டேன். அவள் இப்பொழுது பொன்னி மாதிரியே பெண்மைக் குள்ள பண்பும் அழகும் உடையவளாக ஆகிவிட்டாள்.'' என்று ஆச்சரியத்துடன் சிரித்து விட்டுப் பொன்னியின் கன்னத்தை லேசாகத் தட்டிவிட்டு, அவளை அணைத்துக் கொண்டான். அவள் அவன் பிடியிலிருந்து விலகிக் கொண்டாள். அவள் முகம் சற்று மாறிற்று. ஆனல் அன்பரசு அதைச் கவனிக்கவில்லை.

மல்லிகாவை அவள் நன்கு அறிவாள். அவளைக் கண்டாலே பொன்னிக்குப் பிடிக்காது. மல்லிகாவும் முன்பெல்லாம் சற்று கர்வம் உடையவள் தான், அவளை அன்பரசு புகழ்வது அவளுக்குப் பிடிக்கவில்லை. அன்பரசின் காதலில் அவள் பேதை மனம் சந்தேகம் கொண்டது. அப்படி எண்ணுவது முட்டாள்தனம் என்று தன் மனத்துக்குள்ளேயே கூறிக் கெண்டாள். என்ருலும் அவள் பண்ணுள்ளம் அன்பரசு சாதாரணமாக அப்

படி பேசியதைப் பொருக்க வில்லை. ஒரு பெண்ணின் முன் இன்னொரு பெண்ணைப் பற்றி புகழ்ந்ததே தவறு. அதுவும் தன் காதலியிடம் மற்றொரு பெண்ணைப் பற்றி புகழ்ந்தால், தன் காதலில் அவள் சந்தேக முருவாள் என்ற மனோதத்து வத்தை அன்பரசு உணர்ந்தி ருந்தாலும் இந்த இடத்தில் அவன் வெள்ளை உள்ளம் அதை மறந்துவிட்டது. தன் காதலனுக்கு குறிப்புணர்த்த விரும்பினாள் பொன்னி. மேலும் அவன் என்ன சொல்லுகிறான் என்று பார்க்க விரும்பினாள்.

'வேறு மல்லிகா என்ன சொன்னாள்?; என்று கேட்டாள்

'வருகிற ஞாயிற்றுக் கிழமை என்னையும் உன்னையும் அவளு டைய இல்லத்திற்கு வரச் சொல்லியிருக்கிறாள். பொன் னியை நான் நேரில் பார்த்து எனது வீட்டிற்கு வர அழைக்க வில்லையே என்று எண்ணப் போகிறாள். அவளுடைய வீடு இருக்குமிடம் எனக்குத் தெரி யாது. ஆதலால் அவளுக்கு உங்கள் மூலமே அழைப்பு அனுப்பியிருப்பதாகக் கூறுங் கள்—என்று சொல்லி உன்னை கட்டாயம் ஞாயிறன்று அவளு டைய இல்லத்திற்கு அழைத் து வரக் கூறினாள்' என்றான் அன்பரசு.

'.....' பதில் ஒன்றும் சொல் லவில்லை பொன்னி.

'என்ன பொன்னி, அப்பொ ழுது ஞாயிற்றுக்கிழமை வருகி றாயல்லவா?' அன்பரசு.

'மன்னிக்கவும். எனக்கு அன்று மற்றொரு முக்யமான வேலை இருக்கிறது'—பொன்னி

அன்பரசு திடுக்கிட்டான். அவனுடைய விருப்பத்திற்கு மாறாக பொன்னி பேசியதே கிடையாது. இதுதான் முதல் தடவை.

'வேறு என்ன வேலை இருக் கிறது'—சற்று கோபமாகவே கேட்டான் அன்பரசு.

'என் மாமன் சிங்கப்பூரிலி ருந்து வந்திருக்கிறார் அல் லவா? அவரும் நானும் அன்று மகாபலிபுரம் போவதாக திட்ட மிட்டிருக்கிறோம்' என்று துணிந்து ஒரு பொய் சொன் னாள்.

பொன்னியின் மாமன் சிங்கப் பூரில் ஐந்து வருடம் இருந்து விட்டு சென்னை வந்து பத்து நாட்கள் ஆகிறது. பொன்னி யை அவர்மாமன் மணிவாசகத் திற்கே மணம் முடித்து வைப் பது என்று திட்டமிட்டிருக்கி றார்கள் பொன்னியின் பெற் றோர். அந்தத் திட்டம் பொன் னிக்கும் அன்பரசுக்கும் தெரி யும். சமயம் வாய்க்கும் பொழு தெல்லாம் அத்தகைய திரும ணத்திற்கு தன்னுடைய எதிர்ப்பை தன் தாய் தந்தை யர்களிடம்தெரிவித்துக்கொண் டேயிருந்தாள் பொன்னி. அன் பரசுக்கும் எங்கே பொன்னியை மணிவாசகத்திற்கு மணம் முடித்து விடப் போகிறார்க ளோ என்ற அச்சம் இருந்தது. அப்படி அவன் அஞ்சுகிற நேரமெல்லாம் பொன்னியின மேல் உள்ள உறுதியான நம் பிக்கைதான் அவனுடைய ஏங் கும் நெஞ்சிற்கு ஆறுதலளித் தது.

இப்பொழுது பொன்னி மணிவாசகத்துடன் மகாபலிபுரத்திற்கு போகப் போவதாகச் சொன்னவுடன் அவனுடைய உள்ளம் உடைந்துவிட்டது.

மல்லிகாவைச் சந்திப்பது பற்றி அன்பரசு கூறியதும், அவளைப் பற்றியும், அவள் அழகைப் பற்றியும் அவன் அளவுக்குமேல் புகழ்ந்ததும், பொன்னியின் பெண் உள்ளம் பொருக்கவில்லை. அத்துடன் ஞாயிற்றுக்கிழமை அவள் வீட்டிற்கு வேறு போகப் போவதாக அவன் சொல்லியது, அவளுக்கு வருத்தத்தையும், கோபத்தையும் தந்தது. அதைக் குறிப்பால் உணர்த்த அன்பரசு மல்லிகாவைப் பற்றி பேசுவதில் தனக்குள்ள விருப்பமின்மையைக் காட்ட, தனது முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டும், சரியாகப் பேசாமலும் இருந்து பார்த்தாள் பொன்னி, அப்படியும் அதை உணராத அன்பரசுக்கு-அவன் மல்லிகாவைப் பற்றிப் பேசி தனது உள்ளத்தை வருத்தியதற்கு தானும் அதற்கு திருப்பிச் செய்ய வேண்டும் என்று பொருமியது அவளுடைய உள்ளம். அதன் விளைவுதான் அவளும் மணிவாசகமும் மகாபலிபுரத்திற்கு உல்லாசப் பிரயாணம் போகப் பொவதாகச் சொன்ன செய்தி. பொன்னியின் இந்தக் கூற்றிற்குப் பிறகு அன்பரசு சரியாகப்பேசவில்லை. ஏதோ அவன் யோசனையில் ஆழ்ந்தவன் போலிருந்தான். அவனுடைய ஏங்கிய உள்ளம் என்னென்னவோ எண்ணியது-கணக்கிட்டது.

பொன்னியும் அவன் மவுனத்தைக் கலைக்கவில்லை. திடீரென்று அன்பரசு அந்த இடத்திலிருந்து எழுந்தான். 'வருகிறேன் பொன்னி'—அந்த ஒரே வார்த்தைதான் சொன்னான். பிறகு அவளைத் திரும்பிப் பாராமல் சென்று விட்டான்.

பொன்னி திடுக்கிட்டாள். எந்த நாளும் இதுபோல் விருட்டென்று அவன எழுந்து சென்றதுகிடையாது. எப்பொழுதும் நீண்ட நேர இன்பகரமான உரையாடலுக்குப் பிறகு அன்பரசின் கரம் பொன்னியின் இடையைச் சுற்றி வளைக்க, மகிழ்ச்சி பொங்க இன்பச் சூழ்நிலையில் திரும்புவார்கள். பொன்னியை 12-ம் எண் பஸ்ஸில் உட்கார வைத்துவிட்டு, பிறகுதான் அன்பரசு தனது அறைக்குச் செல்லுவான். ஆனால் இன்று அவனை வழக்கம்போல் அழைத்துக் கொண்டு செல்லாது, தான்மட்டும் 'வருகிறேன்' என்ற ஒரே வார்த்தையுடன் மறுமொழிக்கு காத்திராது அன்பரசு சென்றது பொன்னியை மிகவும்வாட்டியது.

கடற்கரையிலிருந்து எழுந்து தட்டுத் தடுமாறி நடந்து மெதுவாக துயருற்ற நெஞ்சினளாய் 12-ம் எண் பஸ்ஸில் போய் அமர்ந்தாள்.

கடற்கரையிலிருந்து அழுத்தும் நெஞ்சத்தோடு நேரே அறையை நோக்கி விரைந்தான் அன்பரசு. தன் அறை நாற்காலியில் வந்து உட்கார்ந்தான். எதிரே பலவகையான இலக்கிய நூல்கள் இருந்தன. அவனது மனம் சொல்லில் அடங்காது துயருற்றது. மனம் அமைதியில்லாது தவித்தான்.

மன அமைதியில்லாத நேரத்தில் அவன் சிலப்பதிகாரம் போன்ற இலக்கிய நூல்களைப் படிப்பான். மன அமைதிக்கு அவனுக்கு தமிழ் இலங்கியங்கள் தான் அரு மருந்து, எதிரே இருந்த சிலப்பதிகாரத்தை கையில் எடுத்தான். அவனது கை விரல்கள் ஏடுகளைத் தள்ளிக் கொண்டே இருந்தன.

இரவு மணி 2 இருக்கும். அறையிலுள்ள நண்பர் அன்பரசைத் தட்டி எழுப்பினார். 'என்ன அன்பரசு, மணி 2 ஆகிறது—நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே தூங்குகிறீர்களே'' என்றார் நண்பர். அன்பரசின் விரல்கள் எதிரேயுள்ள புத்தகத்தில் கீழே காணும் கானல்வரிப் பாட்டில் பதிந்திருந்தன.

'கானல் வரியான்பாடத் தானொன்
னின்மேல் மனம் வைத்து
மாயப்பொய் பலகூட்டு மாயத்
தாள் பாடினாளென
யறழிசைமேல் வைத்துத் தன்ஊழ்
வினை வந்துருத்தாலின்
உவவுற்ற திங்கள் முகத்தாளைக்
கவுக்கை ஞெகிழ்ந்தனனாய்ப்
பொழுதீங்கு கழிந்தாகலின் எழுதும்
என்றுடனெழாது
ஏவலாளருடன் சூழ்தரக் கோவலன்
தான் போன பின்னர்த்
தாதனிழ் மலர்ச்சோலை ஓதையாயத்து
ஒலியவித்துக்
கையற்ற நெஞ்சினளாய் வையத்தி
னுள் புக்குக்
காதலனுடன்னியே மாதவிதன்
மனைபுக்கான்
ஆங்கு,
மாயிரு ஞாலத்தரசு தலைவணங்குஞ்
ஒழியாணைச் கடர்வாட் செம்பியன்
மாலை வெண்குடை கலிப்ப
ஆழி மால் வரை அகவையா
வெனவே.'

எதிர்கால காதலர்களுக்கு காதல் வாழ்வு நடத்தும் முறையை இன்றைக்கு ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த இளங்கோவடிகள் உணர்த்தும் முறைமையையும், பண்பையும் வியந்தான் அன்பரசு. காதலனும் காதலியும் பேசும், பழகும் முறையை அழகு பட படம் பிடித்துக் காட்டுகிறார் சிலப்பதிகாரத்தின் ஆசிரியர். பொன்னியிடம் மல்லிகாவைப் பற்றியும், அவளுடைய அழகைப் பற்றியும் அவன் புகழ்ததின் விளைவு தான் இப்பொழுது அவன் துயரப்பட நேர்ந்தது என்பதை உணர்ந்தான் அன்பரசு. இத்தகைய எச்சரிக்கையை சிலப்பதிகாரத்தில் கானல் வரி பகுதியின் மூலம் இன்றைக்கு ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முன்பே உணர்த்திய சேர நாட்டு இளவலின் அறிவுத் திறனை படித்து படித்து மகிழ்ந்தான் அன்பரசு.

*

பையன்:—அப்பா...அப்பா அடித்தால் சிரிப்பாள்... ஆட்டினால் குலுக்குவாள் வேண்டுமா?

தந்தை:—என்னதுடா!...

பையன்:—ஐயோ... இது தெரியாதா!...பூ...

[ரா[illegible]]

தமிழ்நாடு ... காப்பக
1832

# ★ கங்கணம் கட்டியவன் ★

**— K. V. விஜயலக்ஷ்மி —**

"நீலா! நீலா!"

"உம்...என்ன?"

"இன்று என்ன தேதி தெரியுமா?"

அவள் கண்கள் காலண்டரை சந்தித்தன. "ஓ! இன்று ஜூன் மாதம் 6-ம் தேதி"

"அவ்வளவுதானா? அந்த தேதிக்கும் நமக்கும் உள்ளத் தொடர்பு. பழைய சம்பவங்கள் நினைவிற்கு வருகிறதா? நீலா?"

"நினைவை விட்டு போனால் தானே! பழைய விஷயத்தைப் புரட்டித் தள்ளுங்கள். புதிய விஷயத்தை பிரித்து நோக்குவதுதான் அழகு. சரி, நேரமாகிவிட்டது. டிபன் தயார் செய்ய வேண்டாமா?" என்று தன் கடமையைச் செய்ய எழுந்திருந்தாள்.

நீலா கூறியதுபோல் புரட்டித் தள்ளக்கூடிய பழைய விஷயமா அது? என் வாழ்க்கையையே புதுப்பித்த புனித நாளன்றோ! கணேசன் — நீலாவின் கணவன்—சிந்தனை வசப்பட்டான். அவன் கண்ணெதிரில் மனத்திரையிலுள்ளது படமாக சுழலத் தொடங்கியது.

* * *

சரியாக மூன்று வருடங்களுக்கு முன்பு—

கொட்டு மேளம் கோஷத்துடன் முழங்க, சுமங்கலிகள் இனிய குரலில் கானம் இசைக்க, புரோகிதர் மந்திரம் ஓத பந்தல் 'ஜேஜே' என்று மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தது.

"உம்....கட்டப்பா மாங்கல்யத்தை...கெட்டி மேளம் கெட்டி மேளம்" என்று எல்லோரும் ஆரவாரம் செய்தனர். ஆனால்.. கல்யாண மாப்பிள்ளையின் கரங்கள் கெட்டி மேளத்திற்குச் சரியாக 'கடகட'வென்று நடுங்கத் தொடங்கியது. உடலோடு நிற்கமாட்டாது தள்ளாடினான். முகத்தில் விவரிக்க முடியாத அவக்களைச் சொட்டத்தொடங்கியது. மணப் பெண்ணின் கழுத்தில் கட்ட வேண்டியதை கீழே ஒரு தட்டில் வைத்து விட்டு விடுவிடென்று வாயிலை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

தன் தந்தையின் மடிமீது அமர்ந்திருந்த மணப்பெண்— நீலா — பதறியவாறு கலவரத்துடன் எழுந்து நின்றாள். அவள் தந்தை காரணம் புரியாது நடுங்கினார். மலை குலைந்தாலும், மனம் குலையாதவர். அப்படிப்பட்ட குணம் அமைய வேண்டிய — போலீஸ் அதிகாரி. திடுக்கிட்டு குழம்பினார். மாப்பிள்ளை பின்னே தலை தெறிக்க ஓடத் தொடங்கினார்.

பந்தல் கலகலத்துவிட்டது. சளசளவென்ற பேச்சும் ரகளை தலையெடுத்தது. நீலா கண்ணீர் வழிய மணப் பந்தலில் நின்றிருந்தாள். நீலாவின் தந்தையோடு ஆணும், பெண்ணுமாக பலர் ஓடினர். பிள்ளை வீட்டாரும்தான்.

"மாப்பிள்ளை! எதற்கு இப்படி வந்துவிட்டீர். என்ன குற்றம் நடந்தது" என தெம்பு இல்லாத குரலில், கெஞ்சும் பாவனையில் நீலா தந்தை— சபேசன்—கேட்டார்.

"என்ன இந்த பிள்ளைக்கு திடீரென்று வந்துவிட்டது?"

ஏன் சபேசா, என்ன இது. உன் மாப்பிள்ளை பேசாமல்

இருக்கிறுன்?''—என்று வேறு பலர் மேலும் கிளறிவிட்டனர்.

"என்ன மாப்பிள்ளை?''— என்றுர் சபேசன் மறுபடியும். அவர் குரலில் ஆத்திரமும், கவலையும் சேர்ந்து கொந்தளித்தன.

"சார், சொல்ல வேண்டும் என்கிறீர்களா? உங்கள்மீதும் சரி—உங்கள் வீட்டவர்மீதும் ஒரு குற்றமும் இல்லை. இந்தாருங்கள்'' என்று தன் இரு கைகளையும் நீட்டினுன் கணேசன். சபேசன் ஒன்றும் விளங்காது தடுமாறினுர். பிள்ளை வீட்டாரில் ஒருவர் "கணேஷ்! இது என்னடா கலாட்டா! வா- முகூர்த்தம் தவறிப்போகிறது, சீக்கிரம். காரணம் கூருமல் கையை நீட்டுகிருயே?'' என்று அதட்டினுர்.

"உங்கள் அதட்டலை நிறுத்துங்கள். காரணத்தை என் வாயால் கூறவும் வேண்டுமா? கையை நீட்டியுள்ளேனே. போலீஸ் அதிகாரியே மாட்டுங்கள் விலங்கை. எனக்குமட்டுமல்ல. பிள்ளை வீட்டார் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கும். அனைவருக்கும் தான்'' என்றுன் படபடப்பாக.

சபேசன் திணறினுர் விஷயம் விளங்காமல், "என்ன, விலங்கை மாட்டுவதா? என்னப்பா! புதிராகப் பேசுகிருய். விவரமாய் சொல்'' என்றுர்.

"சார்! முதலில் என்னை மன்னிக்கவேண்டும்'' என்றுன் கணேஷ். கண்களில் தாரை தாரையாக நீர் பெருக பிறகு தொடர்ந்தான். "நான் யார் என்பது உங்களுக்கு விளங்கவில்லை. நான் ஒரு திருடன். என்னுடன் பல உறவுமுறைகள் கூறிக்கொண்டு வந்து அட்டகாசம் செய்பவர்களெல்லாம் என் — கூட்டாளிகள்— சகாக்கள். முதலில் அவர்களெல்லோரையும் பிடித்து நிறுத்துங்கள். மேலே சொல்கிறேன்'' என இடைவெளி கொடுத்தான்.

அநேகமாக அங்கு வந்துவிட்டிருந்த அவன் நண்பர்கள் கணேஷ் கூறுவதைக் கேட்டு வெலவெலத்து போயினர்.

"ஏண்டா! கணேஷ் உனக்கு மூளை ஏதாவது கெட்டுப்போய் விட்டதா? என்ன உளறுகிருய். சார், நான் இவன் மாமன். மேலே கவனியுங்கள் சார்'' என்று ஒரு மிடுக்கான மனிதர் முன்வந்தார்.

"ஐயோ கணேஷா! ராஜா வாட்டம் இருந்த உன்னை எந்த பாவியடா கெடுத்தான். கண்ணே! உனக்கு என்னடா உடம்பு. உன்னைப் பெற்றவள் நிற்கும்போதும், என் எதிரில் இப்படி பேசுகிருயேடா'' என்று ஒரு அம்மாள் ஒப்பாரியேவைக்கத் தொடங்கினுள்.

"அக்கா! அழாதே.கணேஷா தாயார் கதறுகிருள் நிற்கிருயேடா. என்னையும் வரவில்லை என்று கூறிவிடடா. உம் சொல்லு'' என்று மிரட்டினுள் மாது.

"ஆ! கணேஷ்! என் ஆருயிர் தம்பீ! என் மீது உனக்கு அளவற்ற ஆசையாயிற்றே, என் திருமணத்தின் போது எப்படி ஓடியாடினுய்? எல்லோரையும் வரவேற்றுய்? காலையில் கூட நன்றுய் இருந்தாயே. இப்போது என்னடா வந்துவிட்டது. தம்பீ! யாராவது டாக்டரை அழைத்து வாருங்களேன்''—என்று கூறியவாறு ஒருவன் கணேஷை இறுக

அணைத்துக் கொண்டுவிட்டான்.

கணேஷின் ஆத்திரம் தலைக்கேறியது.கட்டிக்கொண்டவனை உதறித் தள்ளினான். வெறுப்பு சொட்ட "ஹும்... நாடகமெல்லாம் முடிந்ததா! கபட வேஷம் போட்டு இத்தனை நாளாக ஊரை ஏமாற்றியதல்லாமல் இன்னுமா அந்த நாடகம் நடிக்கிறீர்கள். இன்ஸ்பெக்டர் ஸார்! மாமன், தாயார், சித்தி, அண்ணன் முதலிய பாகங்கள் முடிந்துவிட்டன. மேலும் மற்றவைகள் நீடிக்க வேண்டாம். மாட்டுங்கள் விலங்கை" என்றான் உறுதி தொனிக்க. அதற்குள் நழுவ இருந்தவர்களும் வகையாக சிக்கிக்கொண்டனர்.

"இத்தனை நாளாக இவ்வூரில் மக்களை இம்சித்து வரும் கள்ளக் கூட்டத்தினரை, எத்தனை முயன்றும் உங்களால் சிறைபிடிக்க முடியவில்லை. எத்தனையோ லக்ஷக்கணக்கான ரூபாய்கள் பொருமானமுள்ள பொருள்கள் அக்கூட்டத்தினரால் சூறையாடப்பட்டன. அப்படிப்பட்ட கூட்டத்தினரை-உங்களால் இனி பிடிக்க முடியாது என்று எண்ணி சலித்துவிட்ட அவர்களை-இப்போது எதிரில் காண்கிறீர்கள். எனக்கு மாமன் முறை கூறி வக்காளத்து பேசிய அந்த மிடுக்கான மனிதரே அக் கூட்டத்தின் தலைவர். நானும் அக்கூட்டத்தில் ஒருவனே. நான் இவர்களைப் போன்ற திருடனாக எப்போதும் இருக்கவில்லை. நான் நன்கு படித்தவனே. விதிவசத்தால் இவர்களிடம் சிக்கி, இம்முறையில் மாறிவிட்டேன்.

எங்களைப் பிடிக்க முனைந்திருக்கும் போலீஸ் அதிகாரிகளில் ஒருவரான உங்களையே ஏமாற்றி, பொன் பறிக்கும் தொழிலோடு நிற்காது பெண் பறிக்கும் திட்டத்தையும் வகுத்துவிட்டது எங்கள் கூட்டம். அதை நிறைவேற்ற வசமான ஆள் நான் அகப்பட்டேன். அழகும், படிப்பும் அமைந்திருக்கிறது என்னிடம். மற்றவர்களும் ஒரு பெரிய இடத்து மனிதனைப் போல் வேஷமணிந்து ஏமாற்றலாம். முதலில் நானும் சந்தோஷமாக இச்செயலுக்கு இணங்கினேன். சிரமமின்றி அழகான பெண்ணும் சுக வாழ்வும் இன்ஸ்பெக்டரின் மருமகன் என்கிற ஹோதாவும் ஒரே சமயத்தில் கிடைக்கின்றதே என்கிற சபலம்தான்.

காலை முதல் இத்தனை நேரமாக மணப்பந்தலில் அமர்ந்திருக்கும் என்னிடம் ஒரு மாறுதலும்தோன்றவில்லை. முகூர்த்த வேளையில் ஜபித்த மந்திரங்களும்' கெட்டி மேளத்தின் நாத வெள்ளமும், இசையின் இனிமையும், என் நெஞ்சைப் பிழந்தன. அருகில் கள்ளங்கபடமறியாது அமர்ந்திருக்கும் பெண்ணை—நீலாவைப் பார்த்தும் என் மனது என்னையே வாட்டி வதைக்கத் தொடங்கியது. குற்றமில்லாத குடும்பத்தினரை குமுறச் செய்ததே, பேதைப் பெண்ணை கதறவைக்காதே என்றுகட்டளையிட்டது. உடனே அங்கிருந்து புறப்பட்டு விட்டேன். முதலில்தான் மதியீனத்தால் தவறு செய்தேன்: இதில் தவறு? அனைவரும் கூறுங்கள்" என்று வீரகர்ஜனை போல் முழங்கினான் கணேஷ்.

குழுமியிருந்த ஆண் பெண், இருப் பாலரும் அயர்ந்து போயினர். 'திருடனாயிருப்பதுண்டு ஏமாற்றுவதுண்டு

திருந்துவதுண்டு. ஆனால்— இப்படி பலர் முன் தானும் விலங்கை ஏற்க கைநீட்டி கூட்டாளிகளைக் காட்டிக் கொடுப்பது உண்டோ?' என்று வியந்தனர். கணேஷ் திருடன் என அறிந்த பிறகும் அவன் மீது வெறுப்பும், பயமும் ஏற்படாது இரக்கமும் மதிப்புமே அனைவருக்கும் ஏற்பட்டது.

தன் புத்திரியின் விவாகம் தடைபட்டு நின்ற அவமானமும், கவலையும் ஒருபுறம்வாட்ட, தன் வேலையின் கடமையை உணர்ந்தார் சபேசன். திருடர்களை தேடிப்பிடித்து கைதியாக்க வேண்டியது அவர் கடமையாயிருக்க, கைதியே கைநீட்டும் போது பேசாது நிற்பதா? கட்டளை பிறப்பித்தார். விவாகத்திற்கு வந்த சிகப்பு தொப்பிகள், விலங்கை மாட்ட வந்தனர். கைதிகளோடு, வண்டியில் ஏறும் தருவாயில் அலையகுலைய அங்கு ஓடிவந்த நீலா, ஐயோ! அப்பா, அவருக்குமா விலங்கு'' என்று அலறினாள்.

"நீலா! பதட்டபடாதே. அவன் என்ன தாலியா கட்டி விட்டான். இல்லையே சுடியசீக்கிரத்தில் வேறு பிள்ளையைப் பார்த்து உன் விவாகத்தை நடத்திவிடுகிறேனம்மா. உள்ளேபோ ''என்று தன் மகளை ஆறுதல் கூறும் முறையில் தேற்றினார்.

"என்ன அப்பா சொன்னீர்கள்? வேறு பிள்ளையா? ஹூம்... மணப்பந்தலில் அமர்ந்து மந்திரங்களை ஏற்றுக்கொண்டு, ஒருவர் என் கை தொட்டு கங்கணம் கட்டியிருக்கையில், அந்தக் கையை மற்றொருவரிடம் நீட்டுவதா? கூடாது. தவறு செய்தவர் திருந்திவிட்டார். எத்தனை வருஷமானாலும் காத்திருந்து சிறை தண்டனை முடிந்ததும் அவரையே மணப்பேன்'' என்று கண்டிப்பு குழைந்த வாக்கியங்களை வெளியிட்டாள். வீரத் தாய்கள் உதித்த நாட்டில் பிறந்த பெண்மணியல்லவா நீலா? அவள் பேச்சு அனைவரையும் கிடுகிடுக்க வைத்தது

நீலாவின் மொழிகளைக் கேட்டவாறே வண்டியில் ஏறினான் கணேஷ்.

* * *

"எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த வீரன் திட்டமிடுறார்? அந்தப் படையில் இந்த நபரையும் ஒரு சிப்பாயாக ஏற்றுக்கொள்ள முடியுமா?'' என்று வினவியவாறு கையில் டிபனுடன் நீலா என் எதிரில் நின்றாள்.

"உம்.. என்ன நீலா சொன்னாய்?''

"பாவம்... இன்னும் உறக்கம் தெளியவில்லையா? எந்த கோட்டையை பிடிக்க திட்டமிடுகிறார் இந்த வீரன்'' என்று கேட்டேன்?''

ஓஹோ! நீலா நான் புனர் ஜென்மம் எடுத்த நாளின் கொண்டாட்ட நாளல்லவா இன்று. அதனால் நாம் இருவருமாகச் சேர்ந்து 'கோட்டை வீரன்' என்ற சினிமாவைப் பிடிக்கப் போகலாம்'' என்று அவள் கரங்களைப் பிடித்திழுத்தேன்.

"ஆ...அப்படியே'' என்று ஆனந்த களிவெறி கொட்டினாள்.

❋


வித்தியாசம்
1
2
3
4
Raman




# கிழக்கு வெளுத்தது

ஐயோ: பாவம்! அப்பாவி மனிதருக்கு அழுது கொண்டே எழுதும் விகிதம். உமது வாழ்நாள் பூராவும், வீட்டில் ஒரு ப்ரம்ம ராக்ஷஸியிடம் அவதிப்பட்டுச் சாவதைத்தவிர, நாள்பூராவும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிடம் கத்திக்கத்தி தொண்டைதண்ணி வற்றும்படி உபத்திரவப் படுவதால் உமது நிலைமை எப்படித்தானிருக்கும் என்பதை நான் வெகு நன்றாக யூகித்தறிந்து கொண்டுவிட்டேன்.

இத்தனை வேதனைக் களஞ்சியத்துடன் நிற்காமல் புதிய சம்மந்தத்தினால் இன்னும் நூதனமான அனேகசிக்கல்களில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கும் விதியொன்று புதிதாக இன்று ஏற்பட்டுவிட்டதைஎண்ணி நான் வருத்தப்படுகிறேன். நான் யாரென்பது உனக்குத் தெரியாது என்றாலும் நன்மையை உத்தேசித்து இதை எழுதுகிறேன். உமக்குச் சம்மந்தியாய் வரப்போகிற பெரியமனிதர் யார் தெரியுமா?.. அவர் கலப்படக் கம்பத்தைச் சேர்ந்தவர். தேவதாசியை ஒரு ஐயர் மணந்தார். அவருக்குப் பிறந்த உத்தமரே ஸ்ரீமான் ஸேதுராமன் அவர்களாகும். அவருடைய மிகச் சிறுவயதிலேயே தாயார் காலமாகி விட்டதால் தந்தையே தமது சொந்தப் பொறுப்பில் வளர்த்து மேன்மையான முறையில் கொண்டு வந்ததோடு தமது சொந்த சகோதரியின் மகளையே விவாகம் செய்து வைத்துவிட்டார். இந்த ரகஸியத்தை என்னைத்தவிர வேறுயாருக்கும் தெரியாது. ஏனெனில், அக்காலத்தில் நான் அவர்

கள் வீட்டில் சமையல் செய்துகொண்டிருந்த பழய பெருச்சாளியாகும். உமக்கு நன்மை தேடித் தரவே இதை எழுதுகிறேன். சேற்றில் காலே வைத்துவிட்டீர். பத்திரமாய் எழுந்திரும்.

இப்படிக்கு உங்கள் நன்மையைக்கோரும்,

............ ....

சந்திரசேகரனின் மண்டையில் கடிதம் பலமாய் குடையத் துடங்கியது. சாலே என்பதையும் மறந்து தலேயில் கை வைத்து அப்படியே உட்கார்ந்து விட்டார். ஒன்று மேல் ஒன்று கலவரமாய் இப்படி வந்தால் என்ன செய்வது. ஏதோ மகத்தான நல்ல காரியம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்கையில் இத் தகைய விபரீத விஷயங்களே எந்தச் சண்டாளனே எழுதி எல்லோருடைய மனத்தையும் குழப்பிப் பாழாக்குகிறுனே? இதை அந்த மகாதேவி பார்த்துவிட்டால் போதும். இனி வேறு வேண்டாம் இப்போது என்ன செய்வது" என்று குழம்பிப்போய் சில நிமிடங்கள் ப்ரமைபிடித்து நின்ருர்.

பிறகு கடிதத்தை மடியில் சொருகிக்கொண்டு சிறிது நேரம் கழித்து நேரே வீட்டிற்கு வந்தார். வீட்டு வாசலில் கும்பல்கூடி ஜன்னல் வழியாயும், இடுக்குமுடுக்கு வழியாயும் எட்டி எட்டி பார்ப்பதையும், வீட்டுக்குள்ளிருந்து ஏதோ கதவை உடைக்கும் சத்தமும், பயங்கரமான கூச்சல் கேட்பதும், அகிலாண்டம்மாளின் அசுரத்வனியில் ஒப்பாரி போன்று வசைமாரியுடன் பேச்சும், அழுகையும் கலந்து வருவதை கேட்டு சந்திரசேகரன் நடுநடுங்கிப்போய், "இதென்ன கூட்டம்!....என்ன விஷயம்" என்று படபடப்புடன் கேட்டார்.

"விசேஷமா!....இந்த வீட்டில் யாரோ ஒரு ஐயருக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதால் பல வித நாட்டியக் கச்சேரி எல்லாம் செய்கிருர். யாரோ ஒரு நர்ஸம்மா இவரைக் கொண்டுவந்து இங்கு தள்ளிவிட்டுச் சென்ருர். அதைத்தான் வேடிக்கை பார்க்கிருேம்": என்று வெடி குண்டை வீசி எரிவதுபோல் பேசிச் சிரிப்பதைக் கண்டு இவருக்கும் மூளே கலங்கிவிடும்போன்ற அதிர்ச்சி உண்டா கியது.

மெல்ல சமாளித்துக்கொண்டு கூட்டத்தை விலக்கி விறட்டியபடி உள்ளே சென்ருர். கதவு தாளிடப்பட்டிருந்ததால், தடார் புடார் என்று இடித்துக்கூப்பிட்டார். தெருவிலிருக்கும் பொதுமக்கள்தான் கதவை இடிப்பதாக எண் ணித் தாருமாருகத் திட்டி தனது ஆத்திரத்தைக் காட்டி

னள். வீதியிலிருக்கும் ஜனங்கள் பின்னும் ஏளனமாகச் சிரித்துக் கூப்பாடு போடுவதைக்கண்டு மனங்கலங்கிப் போய் அடுத்தவீட்டுப் பக்கமாகச் சென்று புறக்கடை வழியாக வீட்டிற்குள் வந்தார்.

ஏற்கெனவே கொந்தளிக்கும் ஆத்திர அலைகள் அகிலாண்டம்மாளிடம் பின்னும் பொங்கி ப்ரமாதமாக உருண்டுடைய வாரம்பித்தது. சந்திரனைப் பார்த்துப் பொங்கும் கடலைபோல் சந்திரசேகரனைப் பார்த்த உடனே அகிலாண்டம்மாள் அடித்துக்கொண்டு அழாத தோஷமாய் ஆடிப் பாடி அபிநயம் பிடித்தவாறு இரைந்து பேசத் தொடங்கி, "போதுமே சவரணை...உங்கள் பவிஷுக்குத்தக்கபடிதான் சம்மந்தமும் தேடிவிட்டீர்கள். யாரோ ஒரு தீக்ஷிதராம் ஐயோ பாவம். எத்தனை நல்ல மனிதர். வீடுதேடி ஓடி வந்து நமக்கு நன்மைக்காக விஷயத்தை வெகுவாக விளக்கிக் கூறினர். அந்த மனிதனே தேவதாசி மகனும். சொல்லவும் வெட்கமாக இருக்கிறது. அந்தப் பெண் அனுமதேயப் பிண்டமாம். கேட்கும்போதே வயிறு பற்றி எறிகிறது. அதைக் கேட்ட உடனே சேஷகிரிக்குப் பழைய படி மூளையே கலங்கிவிட்டது. நம்ம குடும்பத்திற்கே அவமானம் மூண்டுவிட்டது. இத்தனை அழகான சம்மந்திகள் இந்த பீடை பிணத்தைத் தூக்கிக்கொண்டு போயிருக்கும் வெட்கக் கேட்டை என்னால் சகிக்கவே முடியவில்லை. முதலில் அந்த அல்ப மனிதர்கள்—அனுமதேயர்கள்—வீட்டிற்குப் போய் அந்தப் பாவிப் பெண்ணை இழுத்துக் கொண்டு வந்த பிறகுதான் பேசுவேன்....வீட்டைப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று பத்ரகாளியைப்போல் கூறிக் கொண்டே வீதி பக்கக் கதவை படார் என்று குண்டு வெடிக்கு சத்தத்தைவிட அதிக ஓசையுடன் திறந்து பார்க்கும்போது வீதியிலிருந்த கும்பல்களின் எக்காளத்தின் இறைச்சலைக் கேட்டும், கும்பலைப் பார்த்தும் மேலும் பதின்மடங்காக ஆக்ரோஷத்துடன்வந்து, "சோம்பேரிக் கூட்டங்களா! வெறிபிடித்த நாய்களா! என்னடா இங்கு கூத்து நடக்கிறது. உங்களைக் கேட்பாரில்லை? வேடிக்கையாமே வேடிக்கை. என்ன வேடிக்கை நடக்கிறது" என்று அதட்டியவாறு கொம்பினல் சிறுபிள்ளைகளை நன்ருக அடித்துவிட்டாள்.

இதுவரையிலிருந்த கூச்சலைவிட "பெருமாள் பெரிய பெருமாளான" கதையைப்போல் பின்னும் இரைச்சலும் கைகொட்டலும் அதிகரித்துக் கொக்கரிக்க வாரம்பித்து விட்ட ஜனங்களின் வாயில் இன்னதுதான் வருகிறது என்

பது இல்லாமல் தனக்குத் தோன்றியவாறெல்லாம் கத்தக் கிளம்பினார்கள்.

சில போக்கிரிப்பிள்ளைகள் வேண்டுமென்றே கைகளை தட்டிக்கொண்டு "டேய்! டேய்! பயித்தியம் ஆம்பிள்ளைக்கு இல்லேடா! இந்தம்மாளுக்குத்தான் பயித்தியண்டா....டு...ர்ர் என்று கூச்சலிட்டார்கள். அகிலாண்டம்மாளால் இந்த அவமானத்தைத் தாங்கமுடியவில்லை. ஆத்திரம் பீறிக் கொண்டு வந்தவேகத்தில் தானும் வாயில் வந்தபடி சக்கை போடு போட்டுப் பேசிவிட்டுக் கூட்டத்தை எல்லாம் தடியடியால் விலக்கியவாறு தடதடவென்று சென்றாள். ஆத்திரம் அவமானம் இரண்டும் சேர்ந்து அவளை வதைசெய்கிற வேகத்தில் தான் நடந்துபோகிறோம் என்பதுகூடத் தெரியாமல் விடுவிடு என்று நடந்து ஆஸ்பத்ரிக்குவந்தாள். முன் பின் தெரியாத நிலையில் தான் எங்கே போகிறோம், யாரிடம் பேசுகிறோம் என்பதே தெரியாமல் கால்போன போக்கில் நடந்து சென்றாள்.

பூமாவை எப்படியாவது ஆஸ்பத்ரியிலிருந்து அழைத்து வந்துவிட வேண்டும். அவளால்தான் தனக்கு இத்தகைய கேவலமான நிலைமை வந்துவிட்டது என்கிற தீவிரமான ஆக்ரோஷமும், வெறிபிடித்ததனமும் உண்டாகிவிட்டதால் வீதியில் நடக்கிறோம் என்பதையே மறந்து மிருக ஆவேசத்துடன் ஆஸ்பத்ரிக்குச் சென்றாள்.

வீதியிலுள்ள காவல்காரன் இவள் வரும் வேகத்தையும் அட்டகாஸத்தையும் கண்டு ஒருமாதிரியாகப் பார்த்துக் கொண்டே...."அம்மம்மா! எங்கே இப்படி அவஸரமாக ஓடுகிறீர்கள். நீங்கள் யாரு?...யாரைப் பார்க்கவேண்டும். சற்று நிதானமாக நில்லுங்கள். பெரிய டாக்டர் வருகிற நேரமாகிறது" என்று சொல்லுவதைக் காதிலேயே வாங்காமல் பின்னும் நாலடி நடந்தவாறு காவல்காரனை ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்தாள்.

இதைக்கண்டு கோபங்கொண்ட காவல்காரன் முன்னிலும் அதிகமான இளப்ப நகைநகைத்தபடி, "தே! சொன்னால் தெரியவில்லை. நில்லம்மா! சற்று முன்பு ஒரு பயித்தியம் வந்தது. அதுகூட நான் சொல்லியதற்குச் சற்று மரியாதை கொடுத்துச் சென்றதே...நீ என்னம்மா அதற்கும் மேலாக இருக்கிறாய். உள்ளே போகக்கூடாது. யாரைப் பார்க்கவேண்டும்? பாஸ் எங்கே?" என்று அதட்டிக் கேட்டவாறு வழியை மறைத்துக்கொண்டு நின்றான்.

அகிலாண்டம்மாளின் ரௌத்ரதாண்டவ ஸேர்வையின் வைபவத்தைக் கூறமுடியுமா? இரண்டு கைகளையும்

சேர்த்துக் கடகடவென்று நொருக்கி சாபமிட்டவாறு... "ஏண்டா! யாரைப் பார்க்க வேண்டுமென்ரு கேட்கிருய். ஒரு கழுதையைப் பார்க்கவேண்டும். அதற்காகப் போனல் நாயைப்போல பிடுங்குகிருயே...விலகிப்போடா"...என்று உருமினுள்.

"அடேயப்பா! அதானே பாத்தேன்; கழுதையைப் பாக்க ஒரு கோவேரு........வந்திருக்கிறதா....பேஷ்! அம்மா, இது வெறும் நாயல்ல. வெறிபிடித்த நாய். சொரிபிடித்த நாய்! தெரிந்ததா?"....என்று கூறி கடகடவென்று சிரித்தான்.

அவ்வளவுதான், சீற்றங்கொண்ட சிங்கத்தைப்போல் உடம்பை ஆட்டி உதரிக்கொண்டு காவல்காரனே சற்றும் எதிர்பாராதவிதம் ஒரே தள்ளாக அவனைத் தள்ளிவிட்டு தடதடவென்று உள்ளே நுழைந்து மாயமாய் மறைந்து விட்டாள். எந்த இடத்தில் பூமா படுத்திருக்கிருள் என்பதையறியாத அகிலாண்டம்மாளுக்கு அளவுமீறிய ஆத்திரத்துடன், கோவப்பழக்கண்களுடன் உள்ளு உள்ளாக நுழைந்து பார்ப்பதோடு, எங்கே காவல்காரன் துரத்திக் கொண்டு வந்து பழிதீர்த்துவிடுவானே என்கிற பயமும் உண்டாகியிருந்ததால் சற்றுநேரத்திற் கொருதரம் திரும்பித் திரும்பி பார்த்தபடியே சென்ருள்.

ஒவ்வொரு விடுதியிலும் படுத்திருப்பவரின் பக்கத்தில் உள்ளவர்கள் "யாரம்மா இது! கேட்காமல் சொல்லாமல் இப்படி உள்ளே வந்து தொந்தரவு கொடுக்கிறீர்கள். நாகரீகம் தெரியவேண்டாமா....யாரைத் தேடிக்கொண்டு இப்படி விடுதி விடுதியாக அலேகிறீர்கள்?" என்று கசந்து வெறுத்துக் கூறியதைக் கேட்ட அகிலாண்டத்திற்கு எப்படித்தானிருக்கும். பாவம். அசடுவழிய பல்லேக் காட்டிக் கொண்டும், கடித்துக் கொண்டும் நடையைக் கட்டினுள்.

அவளுடைய கோபத்தைப் பின்னும் கிளருவதுபோல் எதிரே சூடான கஞ்சி பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு வரும் வேலேக்காரி, தடதடவென்று வரும் அவஸரத்தில் இந்தப் பக்கம் ஆந்தை விழிக்குமாம் போலே....போலேடா ...என்றபடி அகிலாண்டம்மாள் வரும் தடபுடலில் இருவரும் மோதியடித்துக் கொண்டதோடு அத்தனை சூடான கஞ்சியும் அகிலாண்டத்தின் கைகளிலும் உடம்பிலும் கொட்டியதுதான் தாமதம். குய்யோ! முறையோ! கோவிந்தா! என்று பெருங் குறல் பாய்ச்சிக் கத்தியபடியே, "அடிபாவி! சண்டாளி! உனக்குப் பகவான் கொடுத்த கண்கள் அவிந்தா போய்விட்டது. பனைமரம்போல் வெட்டிச்

சாய்த்த துண்டுமாதிரி மேலே விழுகிறாயே. நாசமாய்ப் போக. இரு! இரு! பெரிய டாக்டரிடம் இப்படியேபோய் காட்டி உன்னை ஆட்டிவைக்கிறேன், வா. என் கண்மணி! என்னுயிரினும் இனிய பூமாதேவியைப் பார்க்க நான் துடித்துக்கொண்டு வந்திருக்கையில் இப்படியா பரிபவப் படுத்திவிட்டாய்... ஐயயோ! கையும் காலும் நெருப்பா எறி கிறதே! என்னசெய்வேன். நர்ஸ்....நர்ஸ்"....என்று பேயிக் குக் கள்வார்த்த ஆவேசத்தைப்போல் தத்திக் குதித்துத் தாண்டவமாடுவதைப் பார்த்த அந்த ஆயாவுக்குச் சப்த நாடியும் அடங்கிப்போய், தன்னுயிர் இருக்கிறதா போய் விட்டதா என்ற சந்தேகங்கூட உண்டாகி உடல் நடுங்கி யது.

பாவம்! இயற்கையிலேயே அவள் மிகவும் சாதுத் தன்மை வாய்ந்தவள். அவளுடைய வாழ்நாளில் பலவித குற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் இத்தகைய விபரீதம் உண் டாகவில்லை. அதோடு பூமாவைப் பார்க்கவந்திருப்பதாகச் சொல்லிவிட்டதைக் கேட்டதும் மேலும் பதின்மடங்காகப் பயம் அதிகரித்தது. காரணம்; அகல்யாவுக்கும் பெரிய டாக்டருக்கும் நிரம்ப சினேகிதம் என்பதும், பூமாவை அகல்யாவே அழைத்துவந்து படுக்கவைத்ததும் இவளுக்கு நன்றாகத் தெரியுமாதலால் தனக்கேதோ சீட்டுக் கிழியத் தான் இத்தகைய சம்பவம் உண்டாகி விட்டது என்று தோன்றி பதைத்தது.

உடனே அகிலாண்டம்மாளின் காலில் விழுந்து கெஞ் சிக் கூத்தாடிப் பல்லையிளித்துப் பேசி ஒருவாறு சமாதா னம் செய்த பிறகு, "தாயே! மன்னிச்சுடுங்க. அந்த அகல்யாம்மாவும் பூமாவும் படுத்திருக்கும் விடுதிக்கு நானே உங்களைக் கொண்டுவிட்டு வருகிறேன். ஆனால் அங்கு நான் அழைத்துவந்ததாகத் தெரியக்கூடாது. வாருங்கள்" என்று வலிய அழைத்தாள்.

உண்மையில் கொதிக்கும் கஞ்சி கைகளில் கொட்டிய வேகம் எறிச்சலாக எறியும் வேதனையைக்கூட அகிலாண் டம்மாள் பொருள்படுத்தவில்லை. பூமா இருக்கும் விடுதிக்கு டாக்கு டக்கென்று நேரே போகும் வழியும், துணையும் கிடைத்துவிட்ட சந்தோஷத்தில் உடனே குணமே மாறி விட்டது. வெகு நல்லதனமாக பேசியபடியே ஆயாவின் பின்னால் சென்றாள். ஆயாவும் பயந்து நடுங்கியபடியே முன் னால் நடந்தாள். தன் கைகளை உஸ்...உ....என்று ஊதி எரிச்சலுக்கு ஒரு சிறிது ஆறுதலளித்தபடியே அகிலாண் டம்மாள் பின்னோடு நடந்தாள். ஆயா சற்று தூரத்தில் நின்றபடியே, "அம்மணீ! அதோ தெரிகிறதே ரூம், அது தான் பூமா படுத்திருக்கும் விடுதி. நீங்கள் என்னைக் காட்

டிக்கொடுக்காமல் சற்று நின்று பிறகு போங்கள்"! என்று கூறிவிட்டுத் தான் சடக்கென்று மறைந்தாள். 'உள்ளே வயிறெறிய உதடு பழம்சொரிய' என்கிற பழமொழிபடிக்கு அகிலாண்டம்மாள் எங்குமில்லாத வருத்தத்தை மிகவும் ப்ரயாசையுடன் வரவழைத்துக்கொண்டு, "என்னம்மணி! பூமாதேவி...எந்தப் படுபாவிகளின் கண்ணெச்சல் பட்டு உனக்கு இப்படி வந்துவிட்டதடீ கண்ணே!...என் செல்வமே" என்று பெரிய ஒப்பாரி வைத்தபடி கட்டிலை நோக்கிப் பாய்ந்தாள்.

அப்போதுதான் ப்ரசவமாகி சற்று நிம்மதியுடன் கண்மூடி படுத்திருந்த ஒரு இளம் பெண் இந்தக் குறலைக் கேட்டு அலறிக்கொண்டு "அம்மா!...ஐயோ!....இது யாரு" என்று கத்தினுள். கூடவிருந்த அந்தப் பெண்ணின் தாயார் மிக்க ஆத்திரத்தையடைந்து, 'யாரம்மா அது? அனுகரீகப் பிண்டமாய் அழுது கொண்டு வருகிருயே. யாரை நீ தேடியலைந்து எங்கள் விடுதிக்குள் வந்தாய். போ வெளியே! இப்போதுதான் சற்று ஒய்வு எடுத்துக்கொண்டு படுத்துள்ளவளை இப்படியா அலறவைப்பது" என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குற்றமாய்த் தள்ளினுள்.

அந்தஆயா காட்டிய விடுதியைவிட்டு வேறு விடுதிக்குள் தான் புகுந்த குற்றத்தை மறந்து, தன்னை வேண்டுமென்றே ஆயா இப்படி அனுப்பி பரிபவப்படுத்தி விட்டதாக அவள்மீது கடுங்கோபங்கொண்டு சபித்தாள். திக்கு முக்கு தெரியாத இடத்தில் தான் என்னசெய்வது? எப்படி போவது? என்பதே புரியாமல் திருகத்திருக விழித்தபடியே நடந்தாள்.

பூமாவைக் காணுமல் சோர்ந்துவிட்ட அகல்யாவுக்கு இன்னது செய்வதென்றே தெரியாமல் உள்ளம் துடித்தது. தன்னுடைய கண்காணிப்பிலிருக்கும்போதே எப்படி பூமா தப்பிப்போயிருக்க முடியும்? என்கிற மகத்தான எண்ணத்துடன் சிலவினுடிகள் தம்பித்து நின்ருள். எதனுலோ சடக்கென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே எழுந்த நேரே தான் நினைத்த குறிப்பிட்ட இடத்திற்குப் போய் பார்த்தாள்.

மேஜைமீது பலவித மருந்துகள் வைக்கப்பட்டிருந்தது. அதன் பக்கத்தில் உட்கார்ந்துள்ள நர்ஸ் தன்னை மறந்து அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். பூமா பூனைபோல் நடந்துசென்று பாயிஸன்என்று எழுதியிருந்த ஏதோ ஒரு மருந்தை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு தன்னுல்

முடிந்தவேகத்தில் நடப்பதை சூழ்ச்மமாகப் பார்த்துவிட்ட அகல்யா வெகுதைரியமாயும் அன்பே வடிவமாயும் சென்று பூமா கையில் மறைத்து வைத்துக்கொண்டிருந்த விஷ மருந்து புட்டியை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டதோடு, பூமாவை சேர்த்தணைத்தவாறு "அம்மணீ! இதென்ன அசட்டுக்காரியம் செய்யத் துணிந்தீர்கள். இது மிகவும் பயங்கரமானதும், கேவலமானதுமன்றோ! கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையே மறந்து சகலமும் உங்கள் கையில் இருப்பதுபோலல்லவா செய்யத் துணிந்தீர்கள். இதை இப்போது நான் பார்த்துக்கொண்டு வந்ததுபோல் வேறு யாராவது பார்த்திருந்தால் என்னவாகும் தெரியுமா! உங்களை உடனே போலீஸில் பிடித்துவைத்துக் கொலைக் குற்றம் சாட்டி தண்டனை விதிப்பார்கள், தெரியுமா? இன்னொரு விஷயம். உங்களைமட்டும் கொலை செய்ய முயற்சித்த குற்றத்தோடு இன்னொரு உயிரையும் வேண்டுமென்று கொலைசெய்யத் துணிந்ததாக மாபெருங் குற்றத்தைச் சாட்டிக் கடுமையாகத் தண்டித்துவிடுவார்கள். போதும் உங்கள் துணிச்சல். இதோடு விட்டுவிட்டு வாருங்கள் வீட்டிற்குப் போவோம்" என்று பூமாவைப் பேசவிடாமல் தடுத்து வாய்ப்பூட்டுப் போட்டுக் கட்டிப் பிடித்துக் காரில் ஏற்றிவிட்டு பாஸ்கரனையும் ஏற்றிக்கொண்டு தன் வீட்டிற்கே போய்விட்டாள்.

பூமாவுக்குத் தான் ஏதோ மகத்தான பேராபத்தில் சிக்கிக்கொண்டு உழல்வதாகவே தோன்றி பயமும், சொல்லமுடியாத குழப்பமும் தோன்றி வதைக்கிறதேயன்றி, தனக்கு நல்லதைத்தான் செய்ய வருகிறார்கள் இதனால் துன்பமில்லை என்கிற எண்ணமே அவள் இதயத்தில் உதிக்கவில்லை. பூனையின் வாயில் சிக்கிவிட்ட எலியின் கதியையே தான் அடைவதாக எண்ணி, விம்மினாளேயன்றி திமிரிக்கொண்டு போவதற்கு அவளால் சாத்யப்படவில்லை.

அகல்யாவின் மாசற்ற அன்பைப்பற்றித் தெரிந்து கொள்ளாத பூமா அவளைக் கடுமையாகப் பார்த்து முகத்தைச் சுளித்தவாறு சடக்கென்று திருப்பிக்கொண்டாள். விவகாரமறிந்த அகல்யாவோ, பாஸ்கரனோ இச்செய்கையைப் பற்றிக் கோபிக்கவில்லை. சிரித்த முகத்துடன் சந்தோஷமாகவே பார்த்து பார்த்து ஆஸ்வாஸப்படுத்தினார்கள். 'தன்னுடைய அண்ணனுக்குக் குழந்தை பிறக்கப்போகிறது' என்கிற சந்தோஷம் பாஸ்கரனின் இதயத்தில் அமுத ப்ரவாகம்போல் பாய்ந்து தேங்கியது. அந்த உணர்ச்சியின் வேகத்தில் அவன் நெஞ்சம் எண்ணாததும் எண்ணி அலைமோதியது.

தான் எத்தனை ஜன்மத்தில் செய்த பாக்யமோ இத்தகைய மனைவி மாசிலா மாணிக்கம் தனக்குக் கிடைக்கப் பெற்ருள் என்பதை எண்ணி எண்ணி பூரிக்கும் ஆவேசத்தில் அகல்யாவை அப்படியே......ஆனல் இன்னும் அக்னி சாக்ஷியாகக் கைப்பிடிக்கவில்லையே--என்கிற புனிதமான எண்ணமும் கூடவே தோன்றியதால் தன்னிதயத்தில் கொந்தளிக்கும் அன்பு ஜ்வாலையின் ஜோதிக் கனலைத் தன்னிரு விழிகளின் மூலம் அகல்யாவுக்குக் காட்டினன். அதில்தான் எத்தனை உன்னதமான கருத்துக்களும்சூக்ஷ்ம ரகஸ்யங்களும் பொதிந்து கிடந்தன என்பதை அவ்விரு இதயங்களல்லவா அறியமுடியும்.

மகாகெட்டிக்காரியும் யூகசாலியும் மந்திரி மதிக்கு ஒப்பான சிறப்பும் பெற்றவளாகிய அகல்யா பூமாவின் பக்கத்தில் அணைத்துக்கொண்டு உட்கார்ந்தபடியே மெல்லிய குரலில் ஆங்கிலத்தில் "பாம்பின் காதை பாம்புதான் அறியும்... கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய் விடாது." முதலில் நாம்கவனிக்க வேண்டிய லக்ஷியம் நம் குடும்பத்தின் கண்ணியத்தைக் காப்பதாகும். அது சிதறிவிட்டால் எல்லாம் சிதறிவிடும். ஒரு மரம் நன்ருக குளுகுளுவென்று கூடாரமிட்டது போல் கவர்ச்சிகரமாக கப்பும் கிளையும் பூவும் கனியும் குலுங்கிக் கண் கொள்ளாத காட்சியளிப்பதற்கு ஆதிகாரணம் அதன் அடிவேரும் அதைக் காத்து வளர்க்கும் விவசாயியுமே யாகும். தற்சமயம் ஆணி வேரில் ஆட்டங் கண்டிருப்பதோடு விவசாயி ஒய்ந்து சாய்ந்து விட்டிருக்கிருன். இதை உணர்ந்து நாம் பாடுபட்டும் பயனடைய வேண்டும். நான் உங்களுடைய பரிபூர்ண ஸ்வாதந்தர்யம் நிரைந்த பொருள். நீங்கள் என் ஸ்வாமி. கடவுளரிய மானஸீகமாய் நாம் தம்பதிகளாகிவிட்ட போதிலும் உலக மரிய நடக்க வேண்டும். என்பிதாவோ, மாதாவோ... நானே கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் உதித்தாலும் மனம் மாரமாட்டோம். தங்கள் முகத்தில் அத்தகைய பயமும் பீதியும் நிரைந்த ரேகையே படர்ந்து வருவதையே நான் பார்க்கிறேன். அதனல்தான் நானே வலிய உங்களுக்கு இத்தகைய உருதியாகக் கூறுகிறேன். நம்புங்கள். எனக்கு குணந்தான் ப்ரதானம். பணம் பிறகு தான்.

எல்லாவற்றிற்கும் மேலானது அன்பு. என்று உள்ளக் கிளர்ச்சியுடன் வெடித்துவரும் அன்புமலர்களை அப்படியே பாஸ்கரனின் பாதங்களில் உதிர்ப்பதுபோல் உதிர்த்தாள்.

இதைக்கேட்ட பாஸ்கரனின் சரீரமே புல்லரிந்த இன்பத் தேனூறி புலகிதமுறச் செய்தது. பூமா கண்ணை

மூடியவாறு படுத்திருந்ததால் பாஸ்கரனல் கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சி வேகத்துடன் அகல்யாவின் கரத்தைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டு ஆனந்த பாஷ்பத்தை அருவிபோல் பெருக்கிவிட்டான்.

பாஷை புரியாத பூமாவுக்குத் தன்னைப் பற்றித்தான் ஏதோ பெரிய யோசனையுடன் சூழ்ச்சி செய்து பேசுவதாக வித்யாஸ மனப்பான்மை தோன்றி இதுவரையில்லாத ஒரு மூர்க்கத்தனமான கோபம் உண்டாகிவிட்டதால் அகல்யாவைப் பார்த்து பல்லைக் கடித்தவாறு... அகல்யா.... எனக்கு தெரியாத பாஷையில் எதை வேண்டுமானுலும் பேசிக் கொள்ளலாம் என்று எண்ணி ஏதோ என்னைப்பற்றித் தான் நீ இத்தனை நேரம் பேசினய். நான் உன்னைவிட சகல விதத்திலும் இளப்பமானவள்தான். பயித்தியக்காரனின் மனைவிதான். நீ ஐ. ஏ. எஸ்ஸின் மனைவிதான்...

என்று முடிப்பதற்குள் ஏ....பூமா....பூமா... பூ....மா.... எஸ் கே அந்த பூ...மல்லிகைப் பூ....ரோஜாப்பூ....ஜவந்திப் பூ....மா...என்னம்மா....அம்மா....என்று உளறிக்கொண்டு சேஷகிரி வருவதை தூரத்திலிருந்து கண்டுவிட்ட அகல்யாவின் தாயார் ஓடோடிச் சென்று அகல்யாவிடம் கண் ஜாடையில் சொல்லிவிட்டாள். அவ்வளவுதான். இதுவரையில் மனத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த உணர்ச்சிகளுக்குப் பதில் தாங்கமுடியாத அதிர்ச்சி உண்டாகி என்ன நேர்ந்துவிடுமோ! பூமாவின் கர்ப்பம் சிதையாதிருப்பதற்குப் பகவான் துணைபுரிய வேண்டுமே என்ன செய்வேன் என்று கதிகலங்கியவாறு அசந்துபோய் விட்டாள்.

---

## 10

### எரிமலையின் எதிரொலி

அகிலாண்டம்மாள் சென்றபிறகு வீட்டிலிருக்கும் கலவர நிலைமையையும் வீதியில் கூடியுள்ள கூட்டத்தின் அலங்கோலத்தையும் கண்டு தனக்கே பயித்தியம்பிடித்துவிடும் போலான அதிர்ச்சியை அடைந்து சந்திரசேகரன் ப்ரமை பிடித்துவிட்டார் போல் தவித்தார்.

சேஷகிரி மூளை கலங்கிய பரிபவத்துடன் உள்ளே இருப்பது அவருக்குத் தெரியாதாகையால் உள்ளே யாரோ இருக்கிற சந்தடியை அறிந்து வெளித்தாழ்ப்பாளைத்

திறந்து விட்டார். புலிக்கூண்டைத் திறந்த உடனே பாய்ந்து வருவதுபோல் சேஷகிரி ஒரேத் தாண்டலாக ஓடிவந்துப் பேய்க் கூச்சலுடன் சந்திரசேகரனின் முது கில் தாவி உப்புமூட்டை விளையாட்டுக் குழந்தைகள் விளை யாடுவதுபோல் கட்டிகொண்டு உப்போ...உப்போ...ஹி... ஹி...ஹி...ஹி...அப்பா...இதோ பாரு. நீ இப்படியே பூமா படுத்துள்ள ஆஸ்பத்திரிக்கு தூக்கிக்கொண்டு போக வேணும் தெரிந்ததா...உம் ... நடந்துபோப்பா... என்ன இது தடியன்போல் நிற்கிறாயே...என்று முதுகில் ஒரு குத்துவேறு விட்டான்.

அவ்வளவுதான். வீதியில் கூட்டம் போட்டிருந்ததன் ரகஸியம் நன்றாக விளங்கிவிட்டதோடு அகிலாண்டம்மா ளின் பேய்த் தாண்டவத்தின் காரணமும் தெரிந்துவிட் டது. முதுகில் ஒரு சரியான பேர்வழி ஏறி உட்கார்ந்து அமுக்குவதோடு குத்தும்விட்டால் யாரால்தான் பொருக்க முடியும். அவரையும் மீரிய குரலில்...டேய்...சேஷகிரி... இதென்னடா அனியாயம்...இறங்குடா...டேய்... இறங்கு கிறாயா கீழேத் தள்ளிவிடட்டுமா? ராமாயணம் கேட்டவன் ஒரு ஆள் கனமிருக்கிறது என்றானும். அந்தக் கதையைப் போல் நம்முடைய அழகான குடும்பத்தின் கனம் அதைவிட அதிகமாயிருக்கிறதடா! உயிர் போய்விடும் போல் இருக்கிறதடா... பாவி ... இறங்குடா... என்று கத்தினர்.

அவன் இறங்குகிற வழியேயில்லாததால் தடாரென்று கீழே தள்ளிவிட்டுத் தானும் விழுந்தார். அவ்வளவுதான், சேஷகிரி ஒருகைத்துண்டினல் சந்திரசேகரனை அப்படியே கம்பத்துடன் கட்டிவிட்டு அப்பா:...அப்பா....அ.. ப்...பா... போதுமா....பேஷ்....நான் இப்போதே போய், பூமாவைக் கொலை செய்துவிட்டு அகல்யாவைக் கல்யாணம் செய்து கொண்டு உடனே "ஆனைமேலே ஊர்கோலமாம். அகல் யாவுக்குக் கல்யாணமாம்...பாஸ்கரனுக்கு படுதோல்வி யாம், சேஷகிரிக்கு செங்கோல்....கருங்கோல் வைக்கோல்.. கோல் கோல் கோல்" என்றுப் பாட்டுப் பாடிக்கொண்டே ஒரே ஓட்டமாக வாசலில்போய் நாம் முன்பு தெரிவித்தது போல் அகல்யாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

சேஷகிரியின் பரிதாபத்தைக் கண்டு மனம் உருகிய பாஸ்கரனுக்கு துக்கம் பீறிக்கொண்டு வந்தது. தான் எதிரே சென்றால் கட்டாயம் மண்டையை நொறுக்கிவிடு வான் என்பது தெரிந்துவிட்டதாகையால் சற்று பயந்து போய் மருண்டு நின்ற சமயம் அகல்யாவின் பிதா வேக மாகவந்து சேஷகிரியை வழிமறித்து வேறு விடுதிக்கு

அழைத்துச்சென்று...."மிஸ்டர் சேஷகிரி"...என்று அவர் கூப்பிட்டு முடிப்பதற்குள்..."மிஸ்டர் ஸேதுராமன்...ஸேது ராமன் அவர்கள்.. மிஸ்ட்டர் சோத்துராமன், அவர்கள் தானே" என்றுகூப்பிட்டவாறுகைகளைக் கொட்டிச் சிரித் தான்.

உம். ஐயோ பாவம்...ஒரு அற்புதமான மாணிக்கம் பிறந்துள்ள வயிற்றில் இப்படியும், ஒரு ஜடம் பிறந்திருக் கிறது பாவம்....என்று தனக்குள்ளே எண்ணியபடியே... "சேஷகிரி... இதோபாருங்கள்"என்றுமுடிப்பதற்குள்"மிஸ் டர் ஸேதுராமன், இதோ பாருங்கள், நீங்கள்... நீங்கள் நாங் கள் ..நாங்களே,"....ஏ...ஏ...எ. ஏ..ஐ....ஐ....ஸி.. எஸ்....ஐஸி எஸ் ஐ....ஸி ...என்று உளறிப் பின்னும் சிரித்துவிட்டு நாலாபுறமும் வளைத்து வளைத்துப் பார்த்தான்.

இந்தக் கண்ராவிக் காக்ஷியை ஜன்னலால் பார்த்துக் கொண்டுக் கண்ணீர் வடிக்கும் பாஸ்கரனின் மனத்தில் சுருக்கென்று ஏதோ ஒரு எண்ணம் முள்போல் தைத்து வாட்டியது. அது வேறு எதுவுமல்ல, அகல்யாவின் வைரப் பதக்கம் பதித்த 40 வைரன் தங்கபெல்ட்டின் நினைவுதான், ஒருவேளை அவை இவன் பார்த்து எடுத்துவைத்த சமயம் குழம்பிவிட்டதா அல்லது எங்காவது விற்கப்போன இடத் தில் இக்கதி நேர்ந்துவிட்டதா? அதுவும் தவிர வேறுயாரா வது திருடிவிட்டு இவன்தலையில் பழியைச் சுமத்திப் போலீ ஸாரைக் கூட்டி மிரட்டி இருக்கலாமா? அதனால் இம்மாதிரி யாகிவிட்டதா....என்கிற குழப்பமும் கவலையும் அதிகரிக்க அதிகரிக்க அவன் தலை சுழன்றது.

ஏற்கெனவே பயித்தியமாயிருந்த மூளையர்கையால் அதிர்ச்சி தாங்காமல் இம்மாதிரி நேர்ந்திருக்குமா...என்று பலவிதமான அலைபாயும் எண்ணத்துடன் அகல்யாவிடம் ஓடிவந்தான். இவனுடைய பதட்டத்தையும் கண்ணீரையும் கண்ட அகல்யா மனம் தாளாது"....மிஸ்டர்...நான் மூளை வைத்தியர் ஸ்ரீமான் அனுக்ரகத்திற்கு போன் செய்திருக் கிறேன். இப்போதே புறப்பட்டுவிட்டார். ஏதோ தாங்க மாட்டாத அதிர்ச்சியினால்தான் இப்படி ஆகியிருக்கும். கவ லைப்படாதீர்கள். பூமாவுக்கு இவர் வந்துள்ள விஷயம் தெரி யாதிருப்பதற்குத்தான் அப்பா இவரை இங்கேயே மடக்கி விட்டார். சீக்கிரமே குணமாகிவிடும்," என்றுப்ரேமை வழி யக் கூறினாள்.

**பாஸ்க:** அகல்யா! நான் வந்தது டாக்டர் விஷயமாக வல்ல. திடீரென்று இப்படியாகியதற்கு ஒருவேளை உன்னு டைய தங்கபெல்டின் விஷயம் ஏதாவதிருக்குமோ? என்று அவன் இழுத்தாற்போல் கூறி முடிப்பதற்குள் அகல்யா

பாஸ்கரனின் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு ஒரு அற்புதமான சிரிப்புச் சிரித்தாள். இந்த ரகஸ்யத்தை அறியாத பாஸ்கரன் ஆவேசத்துடன் அகல்யாவையே உற்று நோக்கி என்ன விஷயம் சீக்கிரம் சொல்லேன்"....என்று கெஞ்சிக் கேட்பதுபோல் பார்த்தான்.

மிஸ்டர்...எந்தவிதமான ப்ரமாதமும் நிகழ்ந்துவிடவில்லை. நான் செய்தது குற்றமாயிருந்தால் மன்னிக்கவும். நீங்கள் வரதக்ஷிணை பத்தாயிரம் ரூபாயையும் வேண்டாம் என்று சொல்லிய உடனே உங்கள் தாயார், தமயன் இருவரின் முகங்களையும் நான் கவனித்தேன். 'அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பதுபோல், அடுத்தது காட்டும் பளிங்குபோல் கடுத்தது காட்டும் முகம்', என்றபடி முகத்திலிருந்து அவர்களுடைய தவிப்பை—துடிப்பை—தத்தளிப்பை—வெகு நன்ருகப் புரிந்துகொண்டுவிட்டேன். பணத்திற்காகவே இவர்கள் பறக்கிருர்கள் என்பது ஜக ப்ரஸித்தமாயிருக்கிறது. சந்தர்ப்பமோ எக்கச்சக்கமாகிவிட்டது. நம்முடைய இதயங்களோ ஒன்றையொன்று கவ்விக்கொண்டுவிட்டதையும் நான் உணர்ந்தேன். அதனுல்தான் சற்றேரக்குறைய கைநிறைய பணம் வரும்படியான கனமான நகை அதொன்றுதான். மறதியினுல் வைத்துவிட்டேன் என்று சொல்ல முடிந்தது. நான் புதியசேலை மாற்றும்போது நினைவு மறதியால் வைத்துவிட்டதுபோல வேண்டுமென்றே வைத்துவிட்டுவந்தேன்.

**பாஸ்:** என்ன! என்ன!....வேண்டுமென்றே நீயாகவே வைத்தாயா?

**அகல்:** ஆமாம். வேண்டுமென்றே நானுகவே வைத்தேன். ஏன் வைத்தேன் தெரியுமா?...

**பாஸ்கரன்:** அகல்யா......எனக்காகவா?...

**அகல்யா:** இல்லை...இல்லை....எனக்காகவே வைத்தேன். என்னைவிட சகல விதங்களிலும் சிறந்த...

**பாஸ்கரன்:** ஹா....போதும். நிறுத்து அகல்யா...என்னுல் உணர்ச்சி மிகுதியினுல் பேசவேமுடியவில்லை. அகல்யா அந்த ஆபரணம்...உன் மின்னிடையை அழகுபெறச் செய்த....அந்த ஆபரணம்........

**அகல்:** மிஸ்டர் பாஸ்கர்...என்னுயுள் பரியந்தம் அழியாத பேரின்பத்தைத் கொடுக்கும் உங்கள் விலையிலாத—மாசில்லாத—அன்பு பூஷணத்தை அடியாள் விரும்புகிறேனேயன்றி இந்தத் தக்கபூஷணத்தை விரும்பவில்லை. உருக்கினுல் உருமாறி உருண்டையாகும் தங்கத்தை என்று வேண்டுமானுலும் வாங்கலாம்...பெறலாம். ஆனுல் மலையசைந்தாலும் அன்பு மனமசையாத இன்ப பூஷணத்திற்கு

முன்பு வேறு எதுதான் தேவை... இதை என்றும் பகவான் எனக்கு கொடுத்தால் போதும்... மிஸ்டர் பாஸ்கர்! என் மின்னிடைக்கு உகந்த பூஷணம் உங்கள் மலர் கரங்களல்லவா?.... அதை எண்ணியே நான் வைத்தேன். உங்கள் தாயாரோ! தமயனோ பார்த்து எடுத்துக்கொண்டால், நமது மணம் நிறைந்த மணவாழ்க்கைப் பூங்காவில் நாம் எதேச்சையாக உலாவலாம், என்று தோன்றியது. என் பிதா கொடுத்த பத்தாயிரத்திற்குமேல் அந்த ஆபரணத்தில் மதிப்பு இருக்கிறது. அதைக்கொண்டு அவர்கள் த்ருப்தியடைந்து நமக்குத் தடை செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை என்னுள்ளத்தில் எழுந்தது. அதனால் செய்துவிட்டேன்.

பிறகு, அதை யார் எடுத்தார்கள் என்பதை அறியும் பொருட்டும், மறுமுறையும் உங்களைப் பார்க்கும் பொருட்டு நான் அங்கு தங்க பெல்டை மறந்துவிட்டதாக ஒரு பொய்ச் சாக்கைக் கூறிக்கொண்டு வந்தேன். நான் ஒன்று நினைக்கக் கடவுள் ஒன்றைச் செய்துவிட்டார். இதனால் ஒன்றும் ப்ரமாதமில்லை. நீங்கள் தைரியமாக இருங்கள். கடவுள் நம்மைக் காப்பாற்றுவார்" என்று சாவகாசமாய்க் கூறினாள்.

பாஸ்கரனுக்கு இத்தகைய ஒரு விஷயம் நடந்திருக்குமென்று தோன்றவே இல்லையாதலால், ஏதோ ஒரு கதை கேட்பதுபோலும், படிப்பதுபோலும் தோன்றியதுடன் அகல்யாவின் அன்பு வெள்ளத்தை நன்றாக அறியும் சந்தர்ப்பமாகவும் அமைந்தது.

**பாஸ்:** அகல்யா... இப்போது அந்த நகை எப்படி.... யாரிடம் இருக்கிறது என்பதை நான் அறியவேண்டாமா.... "நானு திருடிவிட்டேன்" என்று சேஷகிரி சற்று முன்பு ஆஸ்பத்ரியில் உளரியதும் இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. அவனிடமே நான் சென்று கேட்டுப்பார்க்கட்டுமா?

**அகல்:** வேண்டாம், வேண்டாம்....நானே அதை அவரிடம் தந்திரமாகப் பேசித் தெரிந்து கொள்கிறேன். நீங்கள் எதிரே சென்றால் வீண் முறட்டுத்தனமும், த்வேஷபுத்தியுந்தான் உண்டாகும். நீங்கள் மன்னியைப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் அங்கு போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

இதற்குள் சேஷகிரி "பூமா எங்கே? அகல்யா எங்கே? பூமாதான் செத்துப்போய்விட்டாளே....அவளை....அதனை... என்பதற்குள் அகல்யா மெல்ல அங்கு வந்தாள். "ஹல்லோ...மிஸ்டர் சேஷகிரி! நமஸ்காரம்....சவுக்யமா.... என்று விசாரிப்பதைக் கண்டு சேஷகிரி பெரிதாக கை கொட்டிக்கொண்டு சிரித்தபடி...ஹி...ஹி....ஹி...அகல்யா

அ...க...ல்...யா...யா...என்று இழுத்துப் பின் எழுந்து அவளருகில் வந்து "இதோபாரு அகல்யா! நான் சமத்து. திருடவே இல்லை. அந்த அயோக்யன் பாஸ்கரன் தான் திரு...டன்....திருடன்...என்ன தெரியுமா? என்னுடைய...அந்த...அந்த தள்தளா....பளபளா. . . ஜிலுஜிலு குலுகுலு...என்று மின்னும் நகை இருக்கிறதுபாரு...நான் திருடவே இல்லை. எவனோ சோதாப் பயல்...திருட்டு ராஸ் கல் திருடிவிட்டு என்னைப் போலீஸ்காரனிடம் காட்டிவிடுவேன் என்றான். நானா அவனிடம் அகப்படுவேன்...ஹி... ஹி...ஓடிவந்துவிட்டேன்...பூமா செத்துவிட்டாளோன்னோ?

இதற்குமேல் மதியூகம் நிறைந்த அகல்யாவுக்கு விஷயம் விளங்க எதுவும் வேண்டாம். பாஸ்கரன் எப்படி எல்லாம் குழம்பிப்போய் நினைத்தானோ அப்படி எல்லாம் முடிந்துவிட்டதை நொடியிலறிந்தாள். தன் நகை வைத்த விஷயம் தன் பிதாவுக்குத் தெரியுமாதலால் அவள் பயப்படாமல் பேசத் தொடங்கி..."அப்படியா விஷயம். நீங்கள் வெகு நல்லவர்கள்தான், எனக்குத் தெரியுமே...பூமா செத்துவிட்டதும் உண்மை. உங்களுக்கு வேறு பெண்ணையும் பார்த்து நிச்சயம் செய்துவிட்டோம். இங்கேயே சமத்தாயிருங்கள். நான் இதோ வருகிறேன்."

"இதோபாரு அகல்யா!....அகல்யா...இங்கே வா... போகாதே...எனக்கு வேறு பெண் வேண்டாம். பாஸ்கரன் திருடன். அவன் உனக்கு...நான்தான்..." என்று அத்தனை தடுமாற்றத்திலும் சற்று வெட்கத்துடன் கேட்டான்.

அகல்: அடடாடா! உங்களுக்கு விஷயம் தெரியாதா? நான் பெண்ணல்ல. பூதம்...பிசாசு"...என்று அடுக்குச் சொற்களால் கூறிக்கொண்டே, சேஷகிரியே நடுங்கும்படி ஒரு முறை முறைத்துப் பார்த்தபடியே உள்ளே போய் விட்டாள்.

இதற்குள் டாக்டர் வந்து பார்த்து "பலமான அதிர்ச்சியினால் இப்படியாகி இருக்கிறது. இன்று நன்றாகத் தூங்கும்படி ஒரு மருந்து ஊசி ஏத்துகிறேன்" என்று கூறி பலவந்தமாக ஊசி குத்திவிட்டு வேறு மருந்துகளையும் உள்ளுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

கல்யாணத்தில் ஆரம்பித்த விஷயம் இப்படியா கலவரத்தில்—அதிலும் ஆபத்தான மூளைக்குழப்பத்தில் முடியவேண்டும் என்று எண்ணிய ஸேதுராமன் ஒரு பெரு மூச்சுவிட்டார். சேஷகிரிக்குச் சரியான இரண்டுபேர்களை காவல் வைத்துவிட்டு ஸேதுராமன் உள்ளே சென்றார்.

பாவம், உண்மையில் அகல்யாவுக்கு அலுப்பும் சோர்வும் மனத்தில் ஒரு புதிய கலவரமும் உண்டாகிவிட்டதால் சற்று நேரம் தனிமையை வேண்டினாள். நிம்மதியாக ஒரு புத்தகத்தைப் படிக்கவாரம்பித்தாள்.




அதே சமயம் இவளுடைய வெகு நாளைய சினேகிதை சித்ரா என்பவள் தன் கணவனுடன் வந்தவள் அகல்யாவுக்குக் கல்யாணம் நிச்சயமானதைக் கேள்விப்பட்டு ஓடி வந்தாள். இந்நிலையில் தோழியைக்கண்ட அகல்யா திடுக்கிட்டாள்....